T
6578

T. 6578

ஸ்ரீ

நூற்றெட்டுத்

திருப்பதியந்தாதி.

அழகிய மணவாளதாசர்

என்கிற திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

இயற்றியது.

இஃது

தி - சிதம்பரமுதலியாரவர்கள்

செய்த பதவுரையுடன்

கோ - சண்முகசுந்தர முதலியாரவர்களது

சிவஞானபோதயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை,

சிந்தாதிரிப்பேட்டை.

சர்வஜித்து வரு சித்திரை மீ

(Copyright Reserved.)

திருநந்திபுரவிண்ணகரம்.

செயற்கு - செய்தற்கு,—அரிய - அரியனவற்றை,—செய்வோமை - செய்யும் வண்மையையுடைய நம்மை,—செய்யாமல் - செய்யவொட்டாமல்,—ஐவர் - பஞ்சேந்திரியமானவர்,—வலியால் - தமது வல்லமையினால்,—மயக்குவார் - மயங்கச் செய்வார், (ஆகலின்) நெஞ்சே - மனமே! செங்கண் - செந்தாமரைமலர் போலும் திருநேத்திரங்களையுடைய,—மால் - திருமாலினது,—நந்திபுர விண்ணகரம் - திருநந்திபுரவிண்ணகர மென்னும்,—நாடு - திவ்விய தேசத்தை,—நயம் - சொல் நயம் பொருள் நயம் அமைந்துள்ள,—கல்வி - கல்வியால்,—சிந்தி - (அவ்வைவர் மயக்கின் வயப்படாது) தோத்திரஞ் செய்வாயாக. புரம் - அத்திவ்வியதேசம்,—விண்ணகரம் - பரமபதமேயாகும்,—என்பர் - என்று மகான்கள் கூறுவர்—எ-று.

நூற்றெட்டுத் திவ்விய தேசங்களுள் பரமபதமும் ஒன்றாகலான் அப்பரமபதத்திலடையும் பேரானந்தத்தை இத்திவ்விய தேசத்திலும் அடைதல் கூடுமெனக்கருதி அப்பரமபதத்திற்கும் இத்திவ்வியதேசத்திற்கும் வேற்றுமையின்றென்பது தோன்ற 'புரம், விண்ணகரம் என்பர் என்றார்' எனவுரைப்பினு மமையும்.

விளம்பரம்.

இப்புத்தகம் சென்னை சிங்காதிரிப்பேட்டை சாமி நாயக்கர் வீதி ௧௯ - வது கதவிலக்கமுள்ள வீட்டில் அடியிற் கையொப்பமிட் டிருப்பவரிடம் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இதின் விலை அணா - ௨ [illegible].

அச்சிட்டு வருவன.

கஞ்சவாணன் கோவையுரை.

அழகரந்தாதி - பதவுரை.

இங்ஙனம்

☞ தி - சிதம்பரமுதலியார்.

௧௯-வது நெ. சாமி நாயக்கர் வீதி

சிங்காதிரிப்பேட்டை

சென்னை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நூற்றெட்டுத்திருப்பதி யந்தாதி

மூலமும் - உரையும்.

தனியன்

ஏற்றமணவாள ரிசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக் கேடில்லாத தொன்மாலைப்-போற்றத்
திருப்பதியாநூற்றெட்டினையுஞ் செவிப்போர்
கருப்பதியா வண்ணமுண் டாக.

(இதனதுபதப்பொருள்) தோற்றம் - உற்பத்தியும்,—கேடு - நாசமும்,— இல்லாத - இல்லாத,—தொல் - பழமையாகிய,—மாலை - ஸ்ரீ அப்பதியை,—போற்ற - துதிக்க,—திருப்பதியாம் - திவ்விய க்ஷேத்திரங்களாகிய,—நூற்றெட்டினையும் - நூற்றெட்டையும்,—செவிப்போர் - ஸ்மரணைசெய்பவர்கள்,—கரு - தாயின் உதரத்தில்,— பதியாவண்ணம் - படியாதவிதம்,—உண்டாக் - உண்டாகும்படி,— ஏற்றம் - புகழ்பொருந்திய,— மணவாளர் - மணவாளதாசரென்பவர்,—அந்தாதிவெண்பா - வெண்பா அந்தாதியை,—இசைத்தார் - சொல்லினார் — எ-று.

(கருத்து.) கருப்பதியாவண்ணம் திருமாலைப்போற்ற நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா அந்தாதியை மணவாளதாசர் இசைந்தார் (என்பதாம்.) செபித்தல் - செவித்தலென நின்றது.

நான்முகம்.

ஆழ்வார்கள் துதி.

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் - வையகமென்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு.

(இ-ள்) பொய்கை - பொய்கையாழ்வாரும், — பூதன் - பூதத்தாழ்வாரும், — பேயார் - பேயாழ்வாரும், — பொன்மழிசைக் கோன் - திருமழிசையாழ்வாரும், — மாறன் - நம்மாழ்வாரும், செய்யமதுரகவி - செவ்விய மதுரகவியாழ்வாரும், — சேரர்பிரான் - குலசேகராழ்வாரும், — வையகம் - பூமியிலுள்ளோரால், — என் - நன்குமதிக்கப்பட்ட, — பட்டர்பிரான் - பெரியாழ்வாரும், — கோதை - சூடிக்கொடுத்தாளும், — தொண்டர்பாதப்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வாரும், — பாணன் - திருப்பாணாழ்வாரும், — கட்டு அவிழ் - முறுக்குடைந்த, — தார் - பூமாலையணிந்த, — வாட்கலியன் - திருமங்கையாழ்வாரும். — காப்பு - காவலாகும் — எ-று.

(க-து) பொய்கையாழ்வா ராதியோர் இந்நூலுக் கிடையூறின்றிக் காக்கவேண்டும் — எ-ம். (க)

பிறவாத பேறு பெறுதற் கென்றுநான்றும்
மறவா திறைஞ்செனன் மனனே - துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதி வளநாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள்.

(இ-ள்) என் மனனே - என்னுடைய நெஞ்சே! — துறவாளன் - துறவையுடையவரும், — வண் - அழகிய, — குருகூர் - நா

ரைகள் உலாவும், — வாவி - தடாகங்களையுடைய, — வளம் - வ ளம்பொருந்திய, — வழுதிநாடு - பாண்டிநாட்டை, — உடைய - தமக்கு இருப்பிடமாகவுடைய, — தண் - குளிர்ந்த, — குருகூர் - திருக்குருகூரில் திருவவதாரஞ்செய்தருளிய, — நம்பி - சடகோப ருடைய, — திருத்தாள் - அழகியசரணங்களை, — பிறவாத - ஜனி க்காத, — பேறு - இலாபத்தை, — பெறுதற்கு - அடைதற்கு, — என்றும் - எக்காலத்தும், — மறவாது - மறவாமல், — இ றைஞ்சு - வணங்குவாயாக — எ-று.

(க-று.) என்மனமே! பரமபதத்தை அடைதற்பொருட்டு திருக்குருகூர்நம்பி திருத்தாள் சேவி — எ-ம். (௫.)

முன்னே பிறந்திறந்து மூதலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ வென்னெஞ்சே - சொன்னேன்
இனியெதிரா சன்மங்க ளின்றுமுதற் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி.

(இ-ள்) என் நெஞ்சே - என் மனமே! — முன்னே - பூர்வ ம், — பிறந்து - ஜனித்து, — இறந்து - மரித்து, — மூது - பழ மையாகிய, — உலகில் - பிரபஞ்சத்தில், — பட்ட எல்லாம் - அநு பவித்தயாவையும், — என்னே - ஏன், — மறந்தனையோ - மறந் துவிட்டாயோ, — சொன்னேன் - செப்பினேன், — இனி - இனி மேல், — சன்மங்கள் - பிறவிகள், — எதிரா - வாராவாம், — (ஆத லால்) இன்றுமுதல் - இன்றுமுதற்கொண்டு, — பூதூர் - ஸ்ரீபெ ரும்பூதூரில் எழுந்தருளிய, — முனிஎதிராசன் - எதிராஜமுனிவ ருடைய, — பேர் - திருநாமத்தை, — மொழி - சொல்லுவாயா க — எ-று.

(க-து,) நெஞ்சே - எதிராஜமுனிவர்பேரை ஸ்மரிக்கில் ஜன்ம ம் வராது — எ-ம். (௬)

முக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வா விருக்கின்றேன் - தக்காரெண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு.

(இ-ள்) நாய்அடியேன் - நாய்போன்ற தாசனாகியயான்,— போர - மிகவும்,—தாழ்வான - இழிவாகிய,— சடம் - தேகத்தை,—போட்டு - நீக்கிவிட்டு,—தக்கார் - அறிஞரால்,—எண் - தியானிக்கப்பட்ட,—கூரத்து ஆழ்வான் - கூரத்தாழ்வாரது,— அடியை - திருப்பாதங்களை,—கூடுதற்கு - சேர்வதற்கு,— முக் காலம் - பூத பௌஷிய வர்த்தமான மென்னு மூன்றுகாலங்களும்,—இல்லா - தனக்கில்லாத,—முகில்வண்ணன் - மேகவண்ணனுடைய,—வைகுந்தத்து - பரமபதத்தில்,—எக்காலம் - எந்நாளில்,—செல்வான் - ஏகும்படி,—இருக்கின்றேன் - இருக்கின்றேன்—எ-று. (அந்வயம்) நாயடியே னித்தாழ்வான சடம்போட்டுக் கூரத்தாழ்வானடியைக் கூடுதற்கு முகில் வண்ணன் வைகுந்தத் தெக்காலஞ் செல்வா னிருக்கின்றேனெனக்கூட்டிட்பொருள் கொள்க. (அ)

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாந்
தான்கூட்டி வைத்தநலந் தான்கண்டீ - ராங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்க னின்னருளாற்
பட்டருக்காட் பட்டபயன்.

(இ-ள்) ஆம் கூட்டம் - கூட்டமாகிய,— சிட்டருக்கு - பாகவதர்களுக்கு,—வாய்த்த - கிடைத்த,— திருவரங்கன் - திருவரங்கநாதனது,—இன்அருளால் - இனியகிருபையினால்,—பட்ட

ருக்கு - குணவாளபட்டருக்கு,—ஆட்பட்ட - அடிமைப்பட்டத னாலுண்டாகிய,—பயன் - பிரயோசனமானது,—நான் - (தாச னாகிய)யான்,—கூட்டில் - தேகத்தில்,—வந்தஅன்றே - உதித்த அப்போதே,—நான் அறியா - எனக்குத்தெரியாத,—நன்மை எல்லாம் - நன்மைகளையெல்லாம்,—தான் - தானே,—கூட்டிவைத்த - கிடைக்கும்படி செய்த,— நலம்தான் - உபகாரத்தை,— நல்லவர் - பார்த்தீர்களா!—எ-று.

(க-ரு.) பட்டருக்கு ஆட்பட்டதனா லாய பயன் சகல நன்மையும் தானே கூட்டிவைத்தனன்—எ-ம். (௫)

ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம் - சீர்நடுநா
டாறோடீ ரெட்டுதொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்.

(இ-ள்) சோழம் ஈர் இருபதாம் - சோழநாட்டுத் திருப்பதிக ள் நாற்பதாகும்,—பாண்டி ஈர் ஒன்பதாம் - பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டாகும்,— மலைநாடு ஓர்பதின்மூன்றாம் - மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றாகும்,—சீர்நடுநாடுஓர்இர ண்டாம் - சிறந்தநடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டாகும்,— தொண்டை ஆறோடுஈரெட்டு - தொண்டைநாட்டுத் திருப்பதிக ள் இருபத்திரண்டாகும்,— அவ்வடநாடு ஆறிரண்டு - அவ்வடநா ட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டாகும்,—கூறு - சொல்லாநின் ற— திருநாடு ஒன்று ஆ - திருவைகுந்தம் ஒன்று ஆக நூற்றெ ட்டுத்திருப்பதியென,—கொள் - கொள்ளுவாயாக—எ-று.

(க-ரு.) நூற்றெட்டுத்திருப்பதிகளு மிவ்வழி யடங்கும்-எ-ம்

நூல்.

சோழநாட்டுத்திருப்பதிகள் - ௪0.

திருவரங்கம்பெரியகோயில்.

சீர்வந்த வுந்தித் திசைமுகனு லல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ - ஆர்வம்
ஒருவரங்கங் கோயி லுகந்தவரை யாள்வான்
திருவரங்கங் கோயிற் சிறப்பு.

(இ-ள்) ஆர்வம் - அன்பையுடைய,— ஒருவர் - தாசபூதராம் ஒருவருடைய— அங்கம் - சரீரத்தை,—கோயில் - கோயிலாக,—உகந்து - விரும்பி,—அவரை - அந்தாசபூதரை,—ஆள்வான் - அடிமைகொள்பவனாகிய ஸ்ரீமந்நாராயணனது,—திருவரங்கங்கோயில் - திருவரங்கம்பெரியகோயில் (என்னும் திவ்விய தேசத்தின்,)—சிறப்பு - பெருமையானது,—சீர் - சிறப்புவாய்ந்த,—உந்தி வந்த - நாபிக்கமலத்திலுதித்த,— திசைமுகனுல் - பிரமதேவனுல்,—அல்லாது - அல்லாமல்,—என் - என்னுடைய,—சோர்வந்த - குற்றமுற்ற,—சொல்லில் - மொழியில்,—சுருங்குமோ - அடங்குமோ—எ-று.

(விசேடம்) ஆர்வம் - அன்பையுடைய,—ஒருவர் - ஒப்பற்றதேவசிகள்,—அங்கு அங்கு - அவ்வவ்விடங்களில்,—ஒயில் - அவர்களை ஒழியப்பெற்றுல்,—அவரை - அவர்களை,—உகந்து - சந்தோஷித்து,—ஆள்வான் - அடிமைகொள்பவனுடைய —என்று ரைப்பாருமுளர்.

(க-து.) திருவரங்கங்கோயிற் சிறப்பு எனது சொல்லில் அடங்காது—எ-ம். (க)

திருவுறையூர்.

சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள் - உறப்போந்
தறந்தையா நின்ற வரங்கா திருவாழ்
உறந்தையா யிங்குறைந்த தோது.

(இ-ள்) சிறப்பு உடைய - பெருமைவாய்ந்த,—செல்வம் - ஐஸ்வரியம் பொருந்திய,—திருப்பதிகள்போல - திவ்வியக்ஷேத்திரங்கள்போல,—மறப்புஉடைய - மறதியையுடைய,—நாயேன் - நாய்போன்றவனாகிய எனது,—மனத்துள்-சிந்தையில்,—உற - பொருந்த,—போந்து - வந்து,—அறம் - தருமத்தை,—ஐயா நின்ற - பொருந்தவைக்காநின்ற,—அரங்கா - திருவரங்கநாதனே!—திருவாழ் - பெரியபிராட்டியார் வசிக்கின்ற,—உறந்தையா - திருவுறையூரென்னுந் திவ்வியதேசத்தையுடையவனே,—இங்கு - என்மனதில்,— உறைந்தது - பொருந்திய காரணத்தை,—ஓது - சொல்லுவாயாக—எ-று.

(க-ள்.) உறந்தையா! சிறப்புடைய திருப்பதிகள்போல என் மனத்துள் உறைந்தது ஓது—எ-ம். (௨)

திருத்தஞ்சைநகரம்.

ஓதக்கே ணெஞ்சே யுனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை - போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.

(இ-ள்) நெஞ்சே - மனமே!—ஓத - யான் சொல்ல,—கேள் - கேட்பாயாக,—உனக்கும் இது நன்று - (எந்தனக்கேயன்றி)உந்தனுக்கும் இது நல்லதாகும்,—எனக்கும் - எந்தனுக்கும்,—மே

தக்க - மேன்மையாகிய,—நன்மை - நலமானது,— வேறு இல்லை - பிறிதொன்றில்லை,— போத - மிகவும்,—பெரு - பெரிய,—தஞ்சை - திருத்தஞ்சையென்னுந் திவ்விய தேசத்திலெழுந்தருளிய,—மாமணியை - சிறந்த மாணிக்கம்போன்ற சுவாமியை,—பேணி - போற்றி,—பொருந்து - நித்தியமாக வசித்த,—வடிவம் அஞ்சை - விபவம், பரத்துவம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம், வியூகம் என்னும் ஐந்து வடிவங்களையும்,—மா - பெரிய பிராட்டியாரையும்,—மணியை - கவுஸ்துவமணியையும்,—போற்று - துதிசெய்வாயாக—எ-று.

(க-து.) மனமே! திருத்தஞ்சை மாமணியைப் போற்றின் நம்மிருவருக்கும் நன்மையாம்—எ-ம். (ரு)

திருவன்பில்.

போற்றிசெய வோர்குடைக்கீழ் பொன்னாடு மிந்நாடும்
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை - தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர்.

(இ-ள்) தோற்றம் இலா - உற்பத்தியில்லாத,— எந்தை - என் தந்தையாகிய,—அன்பில் - திருவன்பிலென்னுந் திவ்விய தேசத்திலெழுந்தருளிய,—ஆதி - மூலகாரணனது,—இணைதாமரை அடிக்கு - உபயசரணாரவிந்தங்களுக்கு,— சிந்தை - மனதில்,—அன்பு இலாதார் - பத்தியில்லாதவராகிய,—சிலர் - சிலபேர்,—போற்றிசெய - (யாவரும்) துதிக்க,—ஓர்குடைக்கீழ் - ஏகசத்திரத்தின்கீழ் (அதாவது ஒரே செங்கோலின் கீழ்),— பொன்நாடும் - தேவலோகத்தையும்,—இந்நாடும் - இவ்வுலகத்தையும்,—நால்திசையும் - நான்குதிக்குகளையும்,—ஆண்டாலும் - அரசா

ட்சிசெய்தபோதிலும்;—நன்கு இல்லை - நன்மையில்லை—எ-று வு-தேற்றம்.

(க-து.) எந்தையடிக்கு அன்பிலார் பொன்னுடும் இக்காடு மாண்டாலும் நன்கில்லை—எ-ம். (ச)

திருக்கரம்பனூர்.

சிலமா தவஞ்செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமாநதியிற் படிந்தும் - உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூ ருத்தமன்பேர் கல்.

(இ-ள்) சில - சிறிது,—மாதவம் - பெருந்தவத்தை,—செய்தும் - புரிந்தும்,—தீவேள்வி வேட்டும் - அக்கினி ஹோத்திரமாகிய யாகத்தைச்செய்தும்,—பல - பலவாகிய,—மா நதியில் - மிக்க புண்ணிய ஆறுகளில்,—படிந்தும் - மூழ்கியும்,—உலகில் - உலகத்தில்,—பரம்ப - விரிவாக,—நூல் - சாஸ்திரங்களை,—கற்றும்-வாசித்தும்,—பயன் - பிரயோசனம்,—இல்லை - (ஒன்று) மில்லை (ஆதலால்),—நெஞ்சே - மனமே!—கரம்பனூர் - திருக்கரம்பனூ ரென்னுந்திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—உத்தமன்- புருஷோத்தமனது,—பேர் - திருநாமங்களை,—கல் -கற்றுக்கொள்ளுவாயாக—எ-று.

(க-து.) திருக்கரம்பனூ ருத்தமன்பேரைக் கல்லாது யாது புரியினும் பயனில்லை—எ-ம். (ரு)

திருவெள்ளறை.

கல்லிருந்தா னந்தை கமலத்தோ னக்கமலத்
தில்லிருந்தா னந்தையரங் கேசனென்றே - தொல்லைமறை
உள்ளறையா நின்றனையா லுள்ளமே கள்ளமின்றி
வெள்ளறையான் றுளே விரும்பு.

(இ-ள்) கல் இருந்தான் - (கைலாய) மலையிலிருந்த சிவனா து,—தந்தை - தகப்பன்,—கமலத்தோன் - தாமரையில்வசிக்கும் பிரமனுக்கு,—அக்கமலத்தில்இருந்தான் - அந்தத்தாமரைக்கமல த்திலிருந்த பிரமனது,—தந்தை - பிதா,—அரங்கேசனென்று - திருவரங்கநாதனென்று,—சொல்லை - பழமையாகிய,—மறையு ள் - வேதங்களுள்,—அறையாநின்றமையால் - சொல்லுதலா ல்,—உள்ளமே - மனமே,—கள்ளம் இன்றி - கரவடமில்லாம ல்,—வெள்ளறையான் - திருவெள்ளறையென்னும் திவ்விய தே சத்தையுடையவனது,—தாள் - பாதங்களை,—விரும்பு - ஆசை கொள்ளுவாயாக—எ-று. ஏ-முன்னையது - அசை—பின்னைய து - தேற்றம்,

(க - து.) உள்ளமே! வெள்ளறையான் றாளை விரும்பு— எ-ம். (௬)

திருப்புள்ளம்பூதங்குடி.

விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரும்
அரும்பரம வீடு மடைவீர் - பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீரடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம்.

(இ-ள்) விரும்பினவை - இச்சித்தவைகள்,—எய்தும் - வந் துகூடும்,—வினை அனைத்தும் - வினைகள்யாவும்,—தீரும் - நீங் கும்,—அரு - அரிய,—பரமவீடும் - மேலாகிய மோக்ஷமும்,—அ டைவீர் - சேருவீர்கள் (ஆகலால்),—பெரு - பெரிய,—பொறி - ஐம்பொறிகளை,—கொள் - கொண்ட,—கள்ளம் - கரவடமும்,— பூதம் - பூதங்களும்,—குடிகொள் - வாசமாயிருக்கிற,— காயம் - தேகத்தை,—உடையீர் - உடையவர்களே,—அடிகள் - நம்பெருமானது,—புள்ளம் பூதங்குடியில் - திருப்புள்ளம் பூத

ங்குடி யென்னும் திவ்வியதேசத்துக்கு,—போம் - ஏகுங்கள்— எ-று.

(க-ரு.) புள்ளம் பூதங்குடியிற்சேகில் விரும்பினவை யாவும் கிட்டும்—எ-ம். (எ)

திருப்பேர்நகர்.

போமானை யெய்து பொருமானைக் கொம்புபறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானை - தாமச்
செழுந்திருப்பே ரானைச் சிறுகாலைச் சிந்தித்
தெழுந்திருப்பேற் குண்டோ விடர்.

(இ-ள்) போம் - தனக்குமுன்னதாகச்சென்ற,—மானை - (மாரீசனென்னு) மானை,—எய்து - அத்திரப்பிரயோகஞ்செய்து,—பொரும் - யுத்தஞ்செய்த,—ஆனை - (குவலயாபீடமென்னும்) யானையினது,—கொம்பு - தந்தங்களை,—பறித்து - கவர்ந்து,—ஆம் - விருத்தியாகின்ற,—ஆனை - பசுக்கூட்டத்தை,—மேய்த்துவந்த - மேய்த்துவந்த,—அம்மானை - சுவாமியை,—தாமம் - மாலையணிந்த,—செழு - வளவிய,— திருப்பேரானை - திருப்பேரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனை,—சிறுகாலை - பிராதகாலத்தில்,—சிந்தித்து - தியானித்து,—எழுந்திருப்பேற்கு - எழுந்திருக்கின்றனக்கு,—இடர் - துன்பமானது,— உண்டோ - உள்ளதோ (இல்லை)—எ-று. ஓ-எதிர்மறை.

(க-ரு.) திருப்பேர்நகரானைச் சிந்தித் தெழுந்திருப்பவனுக்கு இடர் இல்லை—எ-ம். (அ)

திருவாதனூர்.

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார் - கடவுளர்க்கு
நாதனா ராதரியார் நாவென்னதென் னூரமலன்
ஆதனூ ரெங்கையடி யார்.

(இ-ள்) அமலன் - பரிசுத்தனும்,—ஆதனூர் - திருஆதனூரொன்னும் திவ்வியதேசத் தெழுந்தருளியவனுமாகிய,— எந்தை - என் தந்தையினுடைய,—அடியார் - தாசபூதர்கள்,—இடர்ஆளுந்துன்பமாகிய,—ஆக்கை - சரீரமானது,— இருக்க - நிலைத்திருக்க,—முயலார் - முயற்சிசெய்யார்,—மடவார்-மாதரது,—மயக்கில்-மையலில்,—மயங்கார் - சொக்கிப்போகார்,—கடவுளர்க்கு நாதன் - தேவேந்திரனுடைய, — ஊர் - தெய்வலோகத்தை,—ஆதரியார் - விரும்பார்,—நான் எனது என்றார் - யான் எனது என்னும் (அகங்கார மமகாரங்களாகிய சொல்லைச்) சொல்லார்கள்—எ-று.

(க-ரு.) ஆதனூர் எந்தையடியார்எவ்வித போகங்களிலும் ஆசையொழிந்திருப்பர்—எ-ம். (க)

திருவழுந்தூர்.

அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத்துந் தீரும் - முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன்னணிய னாம்.

(இ-ள்) அறிவு இலா - புத்தியில்லாத,—பேய்காள் - பேய்க்குச் (சமானமானவர்களே),—அடியார் ஆய் - தாசபூதர்களாய்,—வாழ்மின் - வாழுங்கள், — (அங்ஙனஞ்செய்யில்)-செடி ஆர் - குற்றம்பொருந்திய,—வினை அனைத்தும் - எல்லாவினைகளும்,—தீரும் - நீங்கும்,—முடிவில் - மரணகாலத்தில்,—செழும் தூரத்தன் எனினும் - மிக்கதூரத்தி லிருப்பவனாயிருந்தாலும்,—செங்கண்மால் - சிவந்த(கமல)லோசனனாகிய திருமாலும்,—எங்கள் - எங்களது,—அழுந்தூர்அத்தன் - திருவழுந்தூரிலெழுந்தருளிய (இறைவனுமாகிய) பெருமான்,— அணியன் ஆம் - சமீபத்தவனாவன்—எ-று.

(க-து.) திருவழுந்தூ ரத்தன் கடைநாளில் அணியனும் ஆக லின் அறிவில்பேயனே! அடியராய் வாழ்மின்—எ-ம். (கய)

திருச்சிறுபுலியூர்.

ஆமருவி மேய்த்த வரங்கரெதி ரார்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்- சேமம்
உறுபுலியூர் வன்றோ லுடையா னுடைந்தான்
சிறுபுலியூ ரெந்தைமேற் சென்று.

(இ-ள்) மருவி - பொருந்தி,—வாணனை - வாணாசுரனுடைய,—தோள்சாய்த்தநாள்- புஜங்களை அறுத்துத்தள்ளிய அக்காலத்தில்,—சிறுபுலியூர் - திருச்சிறுபுலியூரென்னும் (திவ்விய தேசத்தி லெழுந்தருளிய),—எந்தைமேல் - என் தந்தையின்மீது,—சென்று - எதிர்த்துப்போய்,—சேமம் உறு - காவலையுடைய,—ஊர் - சஞ்சரிக்கின்ற,—புலி - புலியினுடைய,—வல் தோல் உடையான் - வலிய சருமத்தை ஆடையாகவுடைய ருத்திரனும்,—உடைந்தான் - முதுகிட்டோடினனெனில்,—ஆ - பசுக்கூட்டங்களை,—மருவி - கூடிநின்று,—மேய்த்த - மேயச்செய்த,—அரங்கர் எதிர் - திருவரங்கநாதருக்கு முன்பாக,—ஆர் நிற்பார் - (ஏனையதேவர்களுள்) எதிர்த்து நிற்கவல்லவர் யாவர்?—எ-று. தாம்-அசை.

(க-து.) உருத்திரனே வாணாசுர யுத்தத்தில்முதுகிட்டால் இதரதேவர் நம் மரங்கரெதிர் நிற்க வல்லாரல்லர்—எ-ம். (கக)

திருச்சேறை.

சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயிற்றோறும்
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே - இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறுதே பேருகச்
சேறைக்கு நாயகன்பே ரோசெப்பு.

(இ-ள்) சென்று சென்று - பலதரம்போய்,—செல்வம் - ஐஸ்வரியத்தினால்,—செருக்குவார் - இறுமாந்திருப்பவரது,—வா

யில்தொறும் - முன்றிற்றோறும்,—நின்று நின்று - நெடுநேரம் நின்று;—தூங்கும் - உறங்கிவிழும்,—மடம் - அறியாமையாகிய,—நெஞ்சே - மனமே!—இன் - இனிமையாகிய,—தமிழை - தமிழ்ச்செய்யுளை—கூறைக்கும் - வஸ்திரத்திற்கும்,—சோற்றுக்கும் - அன்னத்திற்கும்,—கூறுதே - பாடாதே,—பேறு ஆக - பயன் உண்டாக,—சேறைக்கு - திருச்சேறையென்னும் திவ்விய தேசத்துக்கு,—நாயகன் - தலைவனது,—பேர் - திருநாமத்தை,—செப்பு - சொல்லுவாயாக—எ-று. கூறுதே என்னு முற்றை எச்சமாக்கிப் பாடாமல் எனவுரைப்பினு மமையும்—

(க-து) நெஞ்சே! இன் தமிழால் சேறைக்குநாதன் பேரை கூறு—எ-ம். (௬௨)

திருத்தலைச்சங்கநாண்மதியம்.

செப்புங்கா லாதவனுந் திங்களும்வா னுந்தரையும்
அப்புங்கா லுங்கனலு மாய்நின்றோன் - கைப்பால்
அலைச்சங்க பேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான்.

(இ-ள்) கைப்பால்-கையினிடத்தில்,—அலை - (சத்துருக்களை) அலையச்செய்யும்,—சங்கம்-பாஞ்சசந்நியத்தை,—ஏந்தும்- தாங்கிய,—அணி - அழகிய,—அரங்கத்து - திருவரங்கத்திலெழுந்தருளிய,—அம்மான் - சுவாமியும்,—தலைச்சங்கநாண்மதியத்தான்-திருத்தலைச்சங்கநாண்மதியமென்னுந்திவ்வியதேசத்திலெழுந்தருளியிருக்கின்றவனுமாகிய (ஸ்ரீயப்பதி),—செப்புங்கால் - சொல்லுமிடத்தில்,—ஆதவனும் - சூரியனும்,—திங்களும் - சந்திரனும்,—வானும் - ஆகாயமும்,—தரையும் - பூமியும்.—அப்பும் - ஜலமும்,—காலும் - காற்றும்,—கனலும் - அக்கினியும்,—ஆய்நின்

றான் - ஆகிநின்றனன்—எ-று. அலை சங்கம் - சமுத்திரத்திலுண்டாகிய சங்கம் எனினுமமையும்.

(க-த்.) திருத்தலைச்சங்கநாண்மதியத்தான் அட்டமூர்த்தமுமாய் நின்றான்—எ-ம். (கங)

திருக்குடந்தை.

தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ - வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந்தாய் பேசு.

(இ-ள்) உலகை - உலகத்தை,—நீதானே படைத்து - நீயே சிருஷ்டித்து—நீதானே அளித்து - நீயே யிரக்ஷித்து,—நீதானே - நீயே,—அழிக்கும் - சம்பரிக்கும்,—தளர்ச்சியோ - இளைப்பினாலோ,—வானில் - ஆகாயத்தில்,—திருமகுடம் - அழகிய கிரீடமானது,—தைக்க - பொருந்த,—சிறு - சிறிய,—குறளாய்—வாமனாவதாரமாகி,—நீண்ட - பின் திருவிக்கிரம அவதாரங்கொண்ட,—பெரும - பெருமானே,—குடந்தை - திருக்குடந்தையென்னுந் திவ்வியதேசத்தில்,—கிடந்தாய் - சயனித்திருக்கின்றனை,—பேசு - சொல்லுவாயாக.—எ-று.

(க-து) நெடியோனே! நீர் திருக்குடந்தையிற் பள்ளிகொண்டது சிருட்டி திதி சம்மாரஞ் செய்ததனாலுண்டாகிய ஆயாசமோ—எ-ம். (கச)

திருக்கண்டியூர்.

பேசவரிற் றென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி - ஈசனார்
உண்டியூர் தோறு முழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை.

(இ-ள்) வாய் - என்வாயானது,—பேசவரில் - பேசவேண்டில்,—தென் - தெற்கின்கணுள்ள,—அரங்கன் - திருவரங்கநாதனது,—பேர் எல்லாம் - திருநாமங்களெல்லாம்,— பேசுக - பேசக்கடவது,—விழி - என் கண்களானவை,—கேசவனை - கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனை,—காண்க - காணக்கடவது,—செவி - என் காதுகள்,—கேட்க - அவன்(புகழையே)கேட்கக்கடவது,—ஈசனார் - ருத்திரனார்,—உண்டி - உணவை,—ஊர்தோறும் - ஊர்கடோறும்,—உழன்று - வருந்திச்சென்று,—இரவாமல் - யாசியாமல்,—தவிர்த்தான் - நீக்கியவனுடைய,—கண்டியூர் - திருக்கண்டியூரென்னுந்திவ்வியதேசத்தை,—என் கை - என்கரங்களானவை,—கூப்புக - குவித்துவணங்கக்கடவன—எ-று.

(க-து.) எனது வாய் முதலிய தென்னரங்கன்புகழ் கூறுதல் முதலியவற்றிற் குபயோகமாகுக—எ-ம். (கரு)

திருவிண்ணகரம்

கையு முரையுங் கருத்து முனக்கேயடிமை
செய்யும்படிநீ திருத்தினாய் - ஐயா
திருவிண் ணகராளா சிந்தையிலு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு.

(இ-ள்) கையும் - கரங்களும்,—உரையும் - சொல்லும்,—கருத்தும் - நினைப்பும்,—உனக்கே - நினக்கே,—அடிமைசெய்யும்படி - தொண்டுபுரியும்வண்ணம்,—நீ - நீயே,—திருத்தினாய் - திருந்தச்செய்தாய்,(ஆதலால் உன்னைத் தியானிப்பதை விட்டு),—ஐயா - ஐயனே,—திருவிண்ணகராளா - திருவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை ஆளப்பட்டவனே,—பெரு - பெரிய,—விண்ணகர் - தேவலோகத்தை,—ஆளும் - அரசுசெய்யும்,—பே

று - செல்வத்தை,—சிந்தையிலும் - மனதிலும்.—எண்ணேன் - (கிஞ்சித்தேனு) நினையேன்—எ-று.

(க-து.) திருவிண்ணகராளா! நினக்குத் தொண்டு செய்வதை விட்டு தேவலோகத்தை ஆளும் பேறு எண்ணேன்—எ-ம்.(கசு)

திருக்கண்ணபுரம்

பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய் - ஏறுநீர்
வண்ணபுரத் தாயென் மனம்புகுந்தாய் வைகுந்தா
கண்ணபுரத் தாயுன் கழல்.

(இ-ள்) ஏறுநீர் - சமுத்திரம்போலும்,— வண்ணம் - நிறத்தையுடைய,—புரத்தாய் - திருமேனியையுடையவனே,—என் - எனது,—மனம் - கருத்தில்,—புகுந்தாய்-பிரவேசித்தவனே,—வைகுந்தா - பரமபதத்தையுடையவனே,—கண்ணபுரத்தாய் - திருக்கண்ண புரமென்னுந்திவ்விய தேசத்தையுடையவனே,—உன்கழல் - நினது திருவடிகளை,—பேறுதரினும் - செல்வத்தைக் கொடுத்தாலும், — பிறப்புஇறப்பு - ஜனனமரணத்தையும்,— நோய் - வியாதியையும். — மூப்பு - விருத்தாப்பியத்தையும்,— வேறுதரினும் - இன்னும் வேறுமெவற்றைக் கொடுப்பினும்,— விடேன் - விட்டுநீங்கேன்—எ-று. கண்டாய் - முன்னிலையசை.

(க-து.) திருக்கண்ணபுரத்தாய்! நன்மைவரினும் தீமைவரினும் நின் கழலை மறவேன்—எ-ம். (கஎ)

திருவாலி.

கழன்றுபோம் வாயுவினைக் கட்டாம தீர்த்தம்
உழன்றுபோ யாடாம லுய்ந்தேன் - அழன்று

பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து.

(இ-ள்) அழன்று - கோபித்து,—பொரு - யுத்தஞ்செய்த,—வாலி - வாலிக்கு,—காலன் - இயமனும்,— பரகாலன் - திருமங்கையாழ்வார்,—போற்றும் - துதிக்கின்ற,—திருவாலி - திருவாலியென்னும் திவ்விய தேசத்திலெழுந்தருளியிருக்கும்,—மாயனை - மாயனென்னுந்திருநாமத்தையுடையவனுமாகிய விஷ்ணுவை,—சேர்ந்து - அடைந்து,—கழன்றுபோம் - உடலைவிட்டு நீங்கிப்போகின்ற,—வாயுவினை - பிராணவாயுவினை,—கட்டாமல் - பந்திக்காமலும்,— தீர்த்தம்,—புண்ணிய நதிகளில்,—உழன்றுபோய் - வருந்திச்சென்று,—ஆடாமல் - ஸ்நாநஞ்செய்யாமலும்,—உய்ந்தேன் - உச்சீவித்தேன்—எ-று.

(க-து) திருவாலிமாயனைச் சேர்ந்து பிராணயாம முதலிய செய்யாமலே உய்ந்தேன்—எ-ம். (சஅ)

திருநாகை.

சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினீ
ஆர்ந்ததற்கோர் கைம்மாறறிகிலேன்-பூந்துவரை
மன்னாகை யாழி வலவா வலம்புரியாய்
தென்னாகை யாயருளிச் செய்.

(இ-ள்) சேர்ந்து - நின்னை அடைந்து,—உனக்கு - உந்தனிக்கு,—குற்றேவல் - சிறியபணிவிடையை,—செய்திலன் - செய்யாதவனாகிய,—என்சிந்தையில் - என் மனதில்,— நீ ஆர்ந்ததற்கு - நீர் எழுந்தருளியதற்கு,—ஓர் கைம்மாறு - ஓர் பிரதியுபகாரமும்.—அறிகிலேன் - தெரிந்திலேன்,— (ஆயினும்) பூம் - அழகிய,—துவரை - துவாரகாபுரிக்கு,— மன்னா - அரசனே,—கை - கரத்தில்,—ஆழி - சக்கரத்தையுடைய,—வலவா - வெற்

றிடையுடையவனே,—வலம்புரியாய் - பாஞ்சசந்நியத்தையுடையவனே,—தென் - தெற்கின்கணுள்ள,—நாகையாய் - திருநாகையென்னுந் திவ்விய தேசத்தையுடையவனே,—அருளிச்செய் - கிருபைசெய்வாயாக—எ-று.

(க-து.) தென்னாகையாய்! நீயென் மனம்புகுந்தநற் கோர்கைம்மாறின்றேனு மருள்புரிக—எ-ம். (கக)

திருநறையூர்.

செய்ய சடையோன் றிசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமறுத் தின்ன மறியாரே - துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல்.

(இ-ள்) துய்ய - பரிசுத்தமாகிய,—மரு-வாசனை தங்கிய,—நறை-தேன்,—ஊர்-பரவுகின்ற,—வண்-வளப்பம்பொருந்திய,—துழாய் - திருத்துழாய் மாலையையுடைய,—மாயோன் - மாயோனென்னுந் திருநாமத்தையுடையவனும்,—செவ் வாயோன் - செந்தாமரைபோன்ற வாயையுடையவனும்,—திருநறையூர் - திருநறையூரென்னுந் திவ்விய தேசத்தில்,—நின்றான் - நின்ற திருக்கோலங் கொண்டவனுமாகிய திருமாலின்,—செயல் - செயலை,—செய்ய - சிவந்த,—சடையோன் - சடையினையுடைய ருத்திரனும்,—திசைமுகத்தோன் - பிரமனும்,—வானவர்கோன் - தேவேந்திரனும்,—ஐயம் அறுத்து - சந்தேகத்தை நீக்கி,—இன்னம் - இன்னும்,—அறியார் - தெளியார்கள் - எ-று. ஏ-தேற்றம்.

(க-து.) திருநறையூர் நின்றான் செயலை ஒருவராலுமுணர்தல் கூடாது—எ-ம். (உ0)

திருநந்திபுர விண்ணகரம்.

செயற்கரிய செய்வோமைச் செய்யாம னெஞ்சே
மயக்குவா ரைவர் வலியால்- நயக்கல்வி
சிந்திபுர விண்ணகர வென்பர்திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு.

(இ-ள்) செயற்கு - செய்தற்கு,—அரிய - அருமையானவை களை,—செய்வோமை - செய்யுந்தன்மையையுடைய எம்மை,—செய்யாமல் - செய்யவொட்டாமல்,—ஐவர் - பஞ்சேந்திரியங்களாவார்,—வலியால் - வன்மையால்,—மயக்குவர் - மயக்குவார்கள் (அன்றியும்),—நயகல்வி-நயப்பொருந்தியகல்வியை,—சிந்தி - தெறித்து(பாடி)—விண்ணகர- தேவேந்திரனுக்குச்சமானமானவனே,—புர - காப்பாயாக,—என்பர் என்றிரக்கும்படி செய்வர்(ஆதலால் - அங்ஙனம் பஞ்சேந்திரியங்களின் வயத்தாய்ச்செல்வதைவிட்டு),—நெஞ்சே - மனமே,—நந்திபுரவிண்ணகரம் - திருநந்திபுரவிண்ணகர மென்னுந் திவ்வியதேசத்தை,—நாடு - தியானிப்பாயாக. எ-று.

(க-து.) பஞ்சேந்திரியங்களின் வயத்தாய்ச் செல்வதைவிட்டு திருநந்திபுரவிண்ணகரம் நாடு—எ-ம். (உக)

திருவிந்தளூர்.

நாடுதும்வா நெஞ்சமே நாராய ணன்பதிகள்
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் - சூடுதும்வா
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரா னடி.

(இ-ள்) நெஞ்சமே - மனமே,—நாராயணன் - நாராயணனுடைய,—பதிகள் -திருப்பதிகளை,—நாடுதும் வா - தரிசிப்போம்

வா,—மெய் - உண்மையாகிய.—அடியார் கூட்டங்கள் - தாச கோஷ்டியில்,—கூடுதும் வா - சேர்வோம் வா,—வீதி - வீதிகளில்,—இந்தளத்து - தூபக்கால்களில்,—அகிலின் - அகிற்கட்டைகளின்,—வீசு - வீசுகின்ற,—புகை - தூமத்தின்,—வாசம் - கந்தமானது,—எழும் - எழுகின்ற,—ஆதி - முதன்மையாகிய,—இந்தளூரான் - திருவிந்தளூரென்னுந் திவ்வியதேசத்தையுடையவனது,—அடி - பாதங்களை,—சூடுதும் வா - தரித்துக் கொள்ளுவோம் வா. எ-று.

(க-து.) நெஞ்சே! நாராயணன் பதிகள் நாடி, மெய்யடியார்கூட்டத்துட்கூடி, அடிசூடிக்கொள்ளுவம் வா—எ-ம். (உஉ)

திருச்சித்திர கூடம்.

அடியா லுலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே னெஞ்சே - கொடிதாய
சூத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல்.

(இ-ள்) நெஞ்சே - மனமே,—அடியால் - திருவடியினால்,—உலகு எல்லாம் - உலகங்களை எல்லாம்,—அன்று - வாமனாவதாரங் கொண்டகாலத்து,—அளந்து கொண்ட - அளவிட்டு வாங்கிக்கொண்ட,—நெடியானை - (பின்)திருவிக்கிரமாவதாரங் கொண்டவனை,—கூடுதியேல் - கூடக்கருதினால்,—கொடிதாய-கொடுமையாகிய,— சூத்திரம் - வஞ்சனையையுடைய,—கூடு - தேகமானது,—அங்கி - அக்கினியில்,—கொளுந்தாமுன் - வேகாமுன்னம்,—கோவிந்தன் - கோவிந்தனுடைய,—சித்திரகூடம் - திருச்சித்திரகூடமென்னும் திவ்வியதேசத்தை,—கருதி - நி

னைத்து,—செல் - ஏகுவாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! தேகம் தகனப்படுவதற்குமுன் திருச்சித்திரகூடங்கருதிச் செல்—எ-ம். (உ௩)

திருச்சிராமவிண்ணகரம்.

செல்லுந் தொறுமுயிர்பின் செல்லு மிருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர் - தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்பின் மீளாத
வூராம விண்ணகர முண்டு.

(இ-ள்) செல்லும் தொறும் - (உடலைவிட் டுயிர்)நீங்கிப்போகுந்தோறும்,—உயிர்பின் - உயிரின்பின்,—செல்லும் - போகாநின்ற,—இருவினையை-(நல்வினை தீவினையென்னும்)இரண்டு வினைகளையும்,—வெல்லும் - செயிக்கின்ற,—உபாயம் - உபாயத்தை,—விரும்புவீர் - இச்சிக்கின்றவர்களே,—தொல் - புராதனமாகிய,—அரங்கர் - திருவரங்கநாதருடைய,— சீராமவிண்ணகரம் - திருச்சிராம விண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை,—சேர்மின் - அடையுங்கள்,—பின் - மறுபடியும்,—மீளாத - திரும்பக்கூடாத,—ஊராம் - திருநாடாகிய,—அ விண்ணகரம் - அந்தப் பரமபதமானது,—உண்டு - கிடைக்கும்—எ-று.

(க-து.) சீராமவிண்ணகரம்சேர்ந்தால் பரமபதம் கிடைக்கும்—எ-ம். (உ௪)

திருக்கூடலூர்.

உண்டுகேட் டுற்றுமோந் துப்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோவுன் றொண்டனேன் - விண்டிலங்கும்
ஆடலூர் நேமிமுத லம்படையா யன்புடையாய்
கூடலூ ராயிதனைக் கூறு.

(இ-ள்) உன் தொண்டனேன் - உனது அடிமையாகிய யான்,—உண்டு - புசித்து,—கேட்டு - கேட்டு,—உற்று - பரிசித்து,—மோந்து - வாசனைபார்த்து,—பார்க்கும் - காண்கின்ற,—ஐவர்க்கே - பஞ்சேந்திரியாதியர்க்கே,—தொண்டுபடல் ஆமோ—அடிமைப்படலாகுமோ.—விண்டு - ஒளிவிட்டு,—இலங்கும் - பிரகாசிக்கின்ற,—ஆடல் ஊர் - போர்புரியும்,—நேமிமுதல் - சக்கரமுதலாகிய,— ஐம்படையாய் - பஞ்சாயுதங்களையுடையவனே,—அன்பு உடையாய் - தயையுடையவனே,—கூடலூராய் - திருக்கூடலூரென்னுந் திவ்விய தேசத்தை யுடையவனே,—இதனைக்கூறு - இதனைச் சொல்லுவாயாக—எ - று.

(க-து.) திருக்கூடலூராய்! உன் தொண்டன் பஞ்சேந்திரியாதியர் வசத்தாதல் தகுதியன்று—எ-ம். (உரு)

திருக்கண்ணங்குடி.

கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவரோ வின்னமென்னை
வேறுபடப் பல்பிறவில் வீழ்த்துவரோ - தேறுகிலேன்
எண்ணங் குடியா யிருந்தானின் முன்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து.

(இ-ள்) எண்ணம்-என்மனதில்,—குடியாயிருந்தான்-வாசமாகவிருந்தவனும்,—நின்முன் - நின்றகோலங் கொண்டிருந்தவனும்,—கிடந்தான் - சயனித்த கோலங்கொண்டவனுமாகிய,—கண்ணங்குடியான் - திருக்கண்ணங்குடியென்னுந் திவ்வியதேசத்தையுடையவரது,—கருத்து - எண்ணமானது,— கூறு - சொல்லுகின்ற,—புகழ் - கீர்த்தியினையுடைய,—தன்அடிக்கே - தனது சரணங்களுக்கே,—கூட்டுவரோ - சேர்ப்பாரோ,—இன்னம் - இனிமேலும்,—என்னை - அடியேனை,—வேறுபட - நாலு

விதப்பட,—பல் பிறப்பில் - பலஜனனங்களில்,— வீழ்த்துவ ரோ - விழும்படிசெய்வாரோ,—தேறுகிலேன் - ஒன்று மறியே ன்—எ-று.

(க-து.) திருக்கண்ணங்குடியான் எண்ணம் யாதோ யானறி கிலேன்—எ-ம். (உகூ)

திருக்கண்ணமங்கை.

கருத்தினால் வாக்கினா னான்மறையுங் காணா
ஒருத்தனைநீ நெஞ்சே யுணரில் - பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண்.

(இ-ள்) கருத்தினால் - மனதினாலும்,—வாக்கினால் - வாக்கினாலும்,—நால்மறையும் - நான்குவேதங்களும்,—காணா - தெரியொணாத,—ஒருத்தனை - ஒருத்தனாகிய விஷ்ணுவை,—நெஞ்சே - மனமே,—நீ உணரில் - நீ அறியில்,—வண்ணம் - நிறமானது,—பெருத்த - பெரிதாகிய,—முகில் - மேகமென்றும்,—அம் - அழகிய,—கை - கரங்களும்,—கண் - நேத்திரங்களும்,—கால் - திருவடிகளும்,—வனசம் - தாமரைகளென்றும்,—திருவரங்கம் - திருவரங்கமும்,—கண்ணமங்கை - திருக்கண்ணமங்கையும்,—ஊர் - அவனது திவ்வியதேசங்களென்றும்,—காண் - அறிவாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! நமது பெருமானை யுணரவேண்டில் முகில் வண்ணனென்றும், வனசம்போன்ற அங்கை கண் காலுடையவ னென்று மறிக—எ-ம். (உஎ)

திருக்கவித் தலம்

காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும் - சேணில்

புவித்தலத்தி லின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால்.

(இ-ள்) காணியும் - பூமியும்,—இல்லமும் - வீடும்,—கைப்பொருளும் - கரத்திலுள்ள திரவியமும்,—பேணிய - விரும்பிய,—வாழ்க்கையும் - வாழ்வும்,—பேர் உறவும் - மிக்க சுற்றமும்,—சேணில் - தெய்வலோகத்திலும்.—புவித்தலத்தில் - பூலோகத்திலு(முண்டாகிய),—இன்பமும் - சுகமும்,—பொங்கு - கோபமுள்ள,—அரவம் ஏறி - ஆதிசேடன்மீ தேறி,—கவித்தலத்தில்,—திருக்கவித்தலமென்னுந் திவ்வியதேசத்தில்,—கண் துயில்வோன் - திருக்கண்வளர்ந் தருளுகின்றவனுடைய,—கால - திருவடியேயாம்—எ-று.

(க-து) திருக்கவித்தலத்தில் கண்துயில்வோன் கால்களே எனது சமஸ்த சம்பத்தும்—எ-ம் (உஅ)

திருவெள்ளியங்குடி.

காலளவு போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார் - கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகலுண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர்.

(இ-) கோலம் - அழகிய,—வெள்ளியங் குடியான் - திருவெள்ளியங்குடி யென்னுந் திவ்விய தேசத்தை யுடையவனது,—சீர் - சிறப்பை,—கால் - திருவடியினால்,—அளவுபோதா - அளவிடுதற்குப்போதாத,—கடல் - சமுத்திரஞ்சூழ்ந்த,—ஞாலத்தோர் - உலகத்தவர்கள்,—கற்ற - வாசித்துக்கொண்ட,—நூல் - சாஸ்திரங்களின்,—அளவு அன்றி - வரையறையி னல்லாமல்,—நுவல்வார்ஆர் - (அந்நூலளவுக்குமேம்பட்டு) சொல்ல

வல்லவர்கள்யாவருளர்—எ-று.

(க-து.) திருவெள்ளறையான் சீர் யாவர் நுவலவல்லவர்—எ-ம். (உ௬)

திருமணிமாடக்கோயில்.

சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினே னெஞ்சேநீ - பாரில்
அணிமாடக் கோயி லரங்கனூர் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு.

(இ-ள்) நெஞ்சே - மனமே,— நீ - நீ,—சீரே - சிறப்பையே,—தரும் - கொடுக்கின்ற,—கதியில் - மோக்ஷபதவியில்,—சேருகைக்கு - அடையும் வண்ணம்,—நான் - யான்,—உன்னை - நின்னை,—நேரேவணங்கினேன் - சாஷ்டாங்கமாக வணங்கினேன்.—பாரில் - பூமியில்,—அணி - அழகிய,—மாடம் - உப்பரிகைகளையுடைய,—கோயில் - திருவரங்கம்பெரியகோயிலிலெழுந்தருளிய,—அரங்கர் - திருவரங்கநாதருடைய, —நாங்கூர் - திருநாங்கூரின் கண்ணதாகிய,—மணிமாடக்கோயில் - திருமணிமாடக்கோயிலென்னுந் திவ்வியதேசத்தை,—வணங்கு - நமஸ்கரிப்பாயாக—எ-று. நாங்கூர் எ-கு நாம்கூர்=அச்சத்தை விளைக்கும் எனினு மமையும்.

(ச-து.) நெஞ்சே திருமணிமாடக்கோயில் வணங்கு—எ-ம்,

திருவைகுந்த விண்ணகரம்.

வணங்கேன் பிறதெய்வ மாலடியா ரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன்-இணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவே னீதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு.

(இ-ள்) பிறதெய்வம் - இதர தெய்வங்களை,—வணங்கேன் - பணியேன்,— மால் - விஷ்ணுவினுடைய,—அடியார் அல்லா - தாசபூத ராசாத,—குணம்கெட்டார்தங்களுடன் - நற்குணமில்லாத கயவருடன்,— கூடேன் - சேரேன்,—இணங்கி நின்று - இயைந்திருந்து,—வைகுந்த விண்ணகரம் - திருவைகுந்தவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை, —வாழ்த்துவேன் - துதிப்பேன்,—ஈது அன்றே - இஃதல்லவோ,—வைகுந்தவிண்ணகரம் - திருவைகுந்த விண்ணகரத்தினுடைய,—வாழ்வு - வாழ்வாவது.

(க-து.) நான்பகவத்விஷயங்களுக்கே யுரியவனாவன்—எ-ம்.

திருவரிமேயவிண்ணகரம்.

வாழு மடியார் மடநெஞ்சே நம்மளவோ
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன் - பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு.

(இ-ள்) அரிமேய விண்ணகரத்தார்க்கு - திருவரிமேயவிண்ணகரமென்னும் திவ்வியதேசத்தையுடையவருக்கு,—மடம் - அறியாமையையுடைய,—நெஞ்சே - மனமே,—வாழும் - வாழ்கின்ற,—அடியார் - பாகவதர்கள்,—நம் அளவோ - நம்மட்டுந்தானோ? அன்று,—தாழும் - தாழ்ந்த,—சடையோன் - சடையினையுடைய ருத்திரனும்,—சதுமுகத்தோன் - பிரமனும்,—பாழி - பலம் பொருந்திய,—கரி - அயிராவதமென்னும் யானையின்மேல்,—மேய - பொருந்திய,—விண்ணகரம் காவலோன் - தேவலோகத்துக்கு அரசனாகிய இந்திரனுமாகும்—எ-று. கண்டாய்—முன்னிலை யசை.

(க-து) திருவரிமேயவிண்ணகரத்தார்க்கு அடியவராவா ரிவரிவரெனக் கூறியது—எ-ம். (௩௨)

திருத்தேவனார் தொகை.

ஆர்க்கும் வலம்புரியா லண்டமு மெண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்கினவால் - சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவனார் தொகையுஞ் சாய்ந்து.

(இ-ள்) சீர்க்கும் -சிறப்புவாய்ந்த,—திருத்தேவனார்தொகை-திருத்தேவனார்தொகை யென்னுந்திவ்வியதேசத்திலெழுந்தருளிய,—மால் - விஷ்ணுவானவர்,—ஆர்க்கும் - சத்திக்கின்ற,—வலம்புரியால்-பாஞ்சசந்நியத்தினால்,—செவ்வாய்வைத்து,—செந்தாமரைபோன்ற வாயில்வைத்து,—ஊத - தொனிக்க,—அண்டமும் - அண்டங்களும்,—எண் திசையும் - அஷ்ட திக்குகளும்,—கார் - கரிய,—கடலும் - சமுத்திரமும்,—வெற்பும் - மலையும்,—தரு தேவனார் - கற்பகத்தருவையுடைய தேவர்களுடைய,—தொகையும் - கூட்டமும்,—சாய்ந்து - மூர்ச்சித்து வீழ்ந்து,—கலங்கின - கலக்கமுற்றன—எ-று. ஆல் - அசை.

(க-து.) திருத்தேவனார்தொகை மால் வலம்புரி வைத்தூத யாவுங் கலங்கின—எ-ம். (நந)

திருவண்புருடோத்தமம்.

சாய்ந்த திருவரங்கந் தண்வேங் கடங்குடந்தை
ஏய்ந்த திருமா லிருஞ்சோலை - பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புரு டோத்தமனன் றனூர்.

(இ-ள்.) சாய்ந்த - சயனித்த கோலங்கொண்ட,—திருவரங்கம் - திருவரங்கமும்,—தண்-குளிர்ச்சிபொருந்திய,—வேங்கடம்-திருவேங்கடமும்,—குடந்தை - திருக்குடந்தையும்,—ஏய்ந்த - பொருந்திய,—திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலை

யும்:—பூ - அழகிய,—துவரை - துவாரகாபுரியும்,—வண்புரு டோத்தமம் - திருவண்புருடோத்தமமும்,—வானவர்க்கும்-தேவர்களுக்கும்,—வானவன்ஆம் - தேவனாகிய,—ஒள் - ஒள்ளிய,—புருடோத்தமன்றன் - புருஷோத்தமனுடைய,—ஊர் - திவ்விய தேசங்களாகும்—எ-று.

(க-து.) ஒள்ளிய புருடோத்தமன் ஊர் இவை யெனக் கூறியது—எ-ம். (௩௪)

திருச்செம்பொன்செய்கோயில்.

ஊர்வேன் மடலை யொழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப் - பாரறிய
வம்பொன்செய் கோயி லரங்கனணி நாங்கூர்ச்
செம்பொன்செய் கோயிலினிற் சென்று.

(இ-ள்.) அம் - அழகிய,—பொன் - பொன்னாற்செய்த,—கோயில் - கோயிலையுடைய,—அரங்கன் - திருவரங்க நாதனது,—அணி - அழகிய,—நாங்கூர் - நாங்கூரின்கணுள்ள,—செம்பொன்செய்கோயில் - திருச்செம்பொன்செய்கோயி லென்னும் திவ்வியதேசத்தில்,—சென்று - போய்,—பார் - பூமியிலுள்ளவர்கள்,—அறிய - தெரிந்துகொள்ளும்படி,—ஊர்வேன்மடலை - மடலின் மேலேறுவேன்,— மடம் - அறியாமையையும், —நாணம் - வெட்கத்தையும்,—ஒழிவேன் - விட்டுவிடுவேன்,—கரிய - கார்நிறைத்தையுடைய,—திருமாலை - விஷ்ணுவை,—சேர்வேன் - அடைவேன்—எ-று.

(க-து.) திருச்செம்பொன்செய்கோயிலில் சென்று மடலூர்தல் செய்வேன்—எ-ம். (௩௫)

திருத்தெற்றியம்பலம்.

சென்றநாள் காலந் திரைநரைமூப் பானவினி
என்றுகொல் சாவறியோ மென்னெஞ்சே - கன்றால்

உருத்தெற்றி யம்பலத்தை யோர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர்.

(இ-ள்) என் நெஞ்சே - என்மனமே,— சென்றது காலம் - காலம் கழிந்தது,—திரை - தேகந் தளர்ந்து சுருங்குதலும்,— நரை - மயிர்வெளுத்தலும்,—மூப்பு - வயோதிகமும்,—ஆன - ஆயின,—இனி - இனிமேல்,—சாவு - மரணம்,—என்றுகொல் - என்றைக்கோ,—அறியோம் - தெளியோம்,—(ஆதலால்) கன்றால் - கன்றுக்குட்டியினால்,—உருத்து - கோபித்து,—எற்றி - மோதி,—அம் - அழகிய,—பலத்தை - பழத்தை,—ஓர் விளவின் - ஓர் விளாமரத்திலின்றும்,—வீழ்த்தான் - விழச்செய்தவனது,—திருத்தெற்றியம்பலத்தை - திருத்தெற்றியம்பல மென்னுந்திவ்வியதேசத்தை,—சேர் - சென்று அடைவாயாக-எ-று.

(க-து.) நெஞ்சே! நரை - திரை - மூப்புவந்தன, இனி சாக்காடு என்று வருமோ, ஆதலால் திருத்தெற்றியம்பலத்தைச் சேர்—எ-ம். (௩௬)

திருமணிக்கூடம்.

சேராது முன்செய்த தீவினைபின் செய்வதுவும்
வாரா தினிநீ மடநெஞ்சே - நேராக்
குருமணிக்கூடத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக் கூடத்தானைச் செப்பு.

(இ-ள்) மடம் - அறியாமையையுடைய,—நெஞ்சே - மனமே,—நீ முன் - நீ பூர்வத்தில்,—செய்த - புரிந்த,—தீவினை - தீயவினையானது,—சேராது - அணுகாது,—பின் - இனிமேல்,—செய்வதுவும் - செய்யும்வினையும்,—இனிவாராது - இனிவந்துசேராது,—(ஆதலால்) நேரா - எதிர்த்த,—குரு - நிறத்தையுடைய,—மணி - ரத்தினகசிதமாகிய,—கூடத்து - கூடத்

நிற்கட்டிட,—ஆனை - குவலயாபீடமென்னும்யானையின்,—கொம்பு - மருப்பை,—பறித்தானை - ஒடித்தவனை,—திருமணிக்கூடத்தானை - திருமணிக்கூடமென்னும் திவ்விபதேசத்தையுடையவனை,—செப்பு - துதிசெய்வாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! திருமணிக்கூடத்தானைச் செப்பின் சஞ்சித பிராரத்த ஆகாமிய கன்மங்கள்நீங்கும்—எ-ம். (௩௭)

திருக்காவளம்பாடி.

செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வங் காண்பாரை - எப்போதும்
காவளம்பா டித்திருமால் காற்று மரைதொழுது
நாவளம்பா டித்திரிவே னன்.

(இ-ள்) என் - என்னுடைய,—செஞ்சொல் - செவ்வியமொழிகளாலாகிய,—தமிழ்மாலை - தமிழ்மாலையை,—மனிதருக்கு - மானிடர்மேல் (நான்),—செப்பேன் - சொல்லேன்,—பிறதெய்வம் - அந்நியதேவதாந்தரங்களை,—காண்பாரை - தரிசிக்கின்றவர்களை,—கைப்பேன் - வெறுப்பேன்,—எப்போதும் - எக்காலத்தும்,—காவளம்பாடி - திருக்காவளம்பாடி யென்னும் திவ்வியதேசத்திலெழுந்தருளிய,—திருமால் - விஷ்ணுவினுடைய,—கால்தாமரை - திருவடித்தாமரைகளை,—தொழுது - வணங்கி,—நா - நாவினால்,—வளம் - வளப்பமுற,—பாடித்திரிவேன் - பாடிச்சஞ்சரிப்பேன்—எ-று.

(க-து.) திருக்காவளம்பாடிமாலைத் தொழுது நாவளமுறப் பாடித் திரிவேன்—எ-ம். (௩௮)

திருவெள்ளக்குளம்.

நானடிமை செய்யவிடாய் நானுனே னெம்பெருமான்
தான டிமை கொள்ளவிடாய் தானுனன் - ஆனதற்பின்

வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து.

(இ-ள்) நான் - யான்,—அடிமைசெய்ய - தொண்டுசெய்வதற்கு,—விடாய் நான் ஆனேன் - நான் தாகங்கொண்டவனாயினேன்,—எம்பெருமான் - எமது பெருமானானவர்,—தான் அடிமைகொள்ள,—தான் தொண்டுகொள்ள,—விடாய் தான் ஆனான் - தானுந்தாகங்கொண்டார்,—ஆனதன்பின் - இங்ஙனமிருவரும் விடாய்கொண்டதற்குப்பின்,—வெள்ளக்குளத்தே - திருவெள்ளக்குளமென்னுந் திவ்யதேசத்தின்கண்,—இருவரும் - யாங்களிருவரும்,—உள்ளம் - மனதில்,—குளம் - வெல்லத்தையும்,—தேன் - தேனையும்,—ஒத்து - ஒப்பாய்,—விடாய் தணிந்தோம் - தாக நீங்கினோம்—எ-று.

(க-து.) திருவெள்ளக்குள நாதனு நானு மாசையுற்று தாசனு மாண்டானு மாகினோம்—எ-ம். (௩௧)

திருப்பார்த்தன்பள்ளி.

ஒத்தமரரேத்து மொளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே - சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன் பள்ளிக்குட் பணி.

(இ-ள்) ஒத்து - ஒன்றுசேர்ந்து,—அமரர் - தேவர்கள்,—ஏத்தும் - துதிக்கின்ற,—ஒளி - பிரகாசம்பொருந்திய,—விசும்பும் - பரமபதமும்,—பாற்கடலும் - திருப்பாற்கடலும்,—இத்தலத்தில் - இப்பூமியின் கண்,—காண்பு அரிய - காணுதற்கரியன (ஆயினும்),—என் - எனது,—நெஞ்சே - மனமே,—சித்து - உண்மையை,—உணர்ந்த - அறிந்த,—தீர்த்தன் - பரிசுத்தனாகிய பிரகலாத ஆழ்வான்,—பள்ளிக்கு இருந்து - பள்ளிக்கூடத்திலிருந்து,—செப்ப - சொல்ல,—வெளிநின்றானை - பிரசன்னமானவ

னை,—பார்த்தன் பள்ளிக்குள் - திருப்பார்த்தன்பள்ளி யென்னும் திவ்வியதேசத்தில்,—பணி - வணங்குவாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! திருப்பார்த்தன்பள்ளியில் பிரகலாத ஆழ்வானுக்குப் பிரசந்நமானவனை வணங்கு—எ-ம். (௪0)

சோழநாடு - முற்றிற்று.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள். கஅ.

திருமாலிருஞ்சோலைமலை.

பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளில்
அணிந்தே னருட்டஞ்ச மாகத் - துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தே னெனக்கு
வருமா லிருஞ்சோதி வான்.

(இ-ள்) திருமாலை - பெரியபிராட்டியை மார்பிலுடைய விஷ்ணுவை,—பணிந்தேன் - வணங்கினேன்,—பாமாலை - பாக்களாலாகியமாலையை,—தாளில்-திருவடிகளில்,—அணிந்தேன் - தரித்தேன்,—அருள் - அவனது கிருபையே,—தஞ்சம் என - பற்றுக்கோடென்று,—துணிந்தேன் - நிச்சயங்கொண்டேன்,—திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையென்னும் திவ்விய தேசத்தை,—சேர்ந்தேன் - அடைந்தேன்,—(ஆதலால்) எனக்கு - என்றனுக்கு,—இரு - பெரிய,—சோதி - பிரகாசமுள்ள,—வான் - பரமபதமானது,—வரும் - சித்திக்கும்—எ-று.

(க-து.) திருமாலிருஞ்சோலைமலை சேர்ந்து பணிந்ததால் எனக்குச் சோதிவான்வரும்—எ-ம். (௪க)

திருக்கோட்டியூர்.

வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கினாய் - தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே யின்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யாள்.

(இ-ள்.) வான் - மழையை,—பார்க்கும் - எதிர்நோக்குகின்ற,—பைங்கூழ்போல் - பசியபயிரைப்போல,—வாளா - கெடாத,—உனது அருளே - உன்னுடைய கிருபையையே,—யான் பார்க்க - நான் எதிர்பார்க்க,—நீ - நீர்,—பார்த்து - கடாக்ஷித்து,—இரங்கினாய் - தயைகூர்ந்தீர்,—தேன்பார்ப்பின் - இளம் வண்டுகளினுடைய,—ஓசை - ஒலி மருவிய,—திருக்கோட்டியூரானே - திருக்கோட்டியூரென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளியிருப்பவனே,—இன்னமும் - இனியாகிலும்,—என் - என்னுடைய,—ஆசை - இச்சையாகிய,—திருக்கு - குற்றத்தை.—ஓட்டி - நீக்கி,—ஆள் - அடிமைகொள்ளுவாயாக—எ-று.

(க-து.) திருக்கோட்டியூரானே! இனி என் குற்றத்தை நீக்கி ஆள்வாயாக—எ-ம். (௪௨)

திருமெய்யம்.

ஆளாயுனக்கன்பா யாசையாய் நாணிலியாய்
வாளா மனைவியென்று வாழ்வேனைக் - கேளாய்
திருமெய்ய மாயா சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன்.

(இ-ள்) உனக்கு - உந்தனுக்கு,—ஆளாய் - தாசபூதனாகி,—அன்பு ஆய் - பிரீதியுடையவனாகியும்,—ஆசையாய் - ஆர்வமுடையவனாகியும்,—நாண் இலியாய் - வெட்கமில்லாதவனாகியும்,—வா

[illegible] - [illegible]க,— மனைவியென்று - களத்திரமென்று,—வாழ்வேனை - வாழ்கின்ற என்னை,—திருமெய்யம் - திருமெய்ய மென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியிருக்கும்,—மாயா - மாயனே,—கேளாய் - கேட்பாயாக,—சிலை - வில்லை,—கால் வளைத்து - காலால் வளைத்து,—மாயா - கெடுதலில்லாத,—மதன் - மன்மதனானவன்,—எய்ய - பாணப்பிரயோகஞ்செய்ய,—வரும் - வருகின்றான், (ஆதலால் என்னைக் காத்தருள்க)—எ-று.

(க-து.) என்னை மையலிற் சிக்கவொட்டாது காத்தருள்.எ-ம்.

திருப்புல்லாணி.

மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா லிதயங் கரையு - முதலாய
புல்லாணி மாலே புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு.

(இ-ள்) மதம் - மும்மதங்களைப் பொழிகின்ற,—யானை - கஜேந்திரனென்னும் யானையினது,—கோள் - இடையூற்றை,—விடுத்து - நீக்கி,—மா - பெரிய,—முதலை - முதலையை,—கொன்ற - சம்மரித்த,—கதையால் - சரித்திரத்தினால்,—இதயம் - மனமானது.—கரையும் - உருகும்,—முதல்ஆய - தலைமையாகிய,—புல்லாணி - திருப்புல்லாணியென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—மாலே - மஹாவிஷ்ணுவே,— புறத்தோர் - இதர தேவதைகளை,—புகழ் - சிறப்பித்துச்சொல்லுஞ்சொல்,—என் செவிக்கு - என் காதுகளுக்கு,—இருப்பு வல்லாணி - வலிய இருப்பாணியும்,—மாறு - விரோதமுமாகும்—எ-று.

(க-து.) திருப்புல்லாணிமாலே! நின் புகழையன்றி வேறொன்றையுங் கேளேன்—எ-ம். (௩௩)

திருத்தண்காலூர்.

மாறுபட வாடையெனும் வன்கால்வந் தென்முலைமேல்
ஊறுபட வூர்ந்த வுலைவெல்லாம் - மாறத்
திருத்தண்கா லூரான் றிருத்தண் டுழாயின்
மருத்தண்கா லூராதோ வாய்ந்து.

(இ-ள்) மாறுபட - வேற்றுமையுண்டாக,—வாடைஎனும் - வாடை யென்கின்ற,— வன் கால் - வலிய காற்றானது,— வந்து - வந்து,— என் முலைமேல் - என் தனங்களின் மீது,—ஊறுபட - தீமை விளைய,— ஊர்ந்த - பொருந்திய,— உலைவு எல்லாம் - கெடுதி எல்லாம்,—மாற - நீங்க,— திருத் தண்காலூரான் - திருத்தண்காலூ ரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனது,—திரு - அழகிய,— தண் - குளிர்ந்த,— துழாயின் - திருத்துழாய்மாலையின்,—மரு - வாசனைபொருந்திய,—தண் - குளிர்ந்த,—கால் - காற்றானது,—வாய்ந்து - பொருந்தி,—ஊராதோ - தவழ்கிறாதோ—எ-று.

(க-து.) திருத்தண்காலூரான் திருத்துழாயின் தண்ணிய காற்று என் தனங்களின்மீது வீசின் முன் வாடைக்காற்றா லுண்டாகிய துன்பம் நீங்கும்—எ-ம். (சரு)

திருமோகூர்.

வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ
மேயாம லப்பால் விரையுமோ - மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நாளை
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து.

(இ-ள்) கூர் - கூர்மையான,—வாய் - வாயையுடைய,—அன்னம் - அன்னப்பக்ஷியானது,—வாழ்ந்து - வாழ்ந்திருந்து,—

வாயால் - வாயினும்,—மலர் - புஷ்பங்களை,—கோதி - கொந்தியருந்து,—வாவிதொறும் - தடாகங்கள்தோறும்,—ஏயுமோ - பொருந்துமோ,—மேயாமல் - இரைதேடாமல்,—அப்பால் - அப்புறம்,—விரையுமோ - வேகமாகச் செல்லுமோ,—மாயன் - திருமாலினுடைய,—திருமோகூர்வாய் - திருமோகூரென்னும் திவ்வியதேசத்தில்,—இன்று - இன்றைத்தினம்,— சேருமோ - அடையுமோ,—நாளை - நாளையதினம்,—வருமோ - வருமோ அறிகிலேன்) —எ-று.

(க-து.) தூதனுப்பிய அன்னத்தின் தன்மை கூறியது—எ-ம்.

திருக்கூடல்.

வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையி லின்னமென்னை
ஆழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன் - தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ கானின் குறிப்பு.

(இ-ள்) தாழ்வு இலா - மேன்மையாகிய,—பாடல் - பாசுரங்களின்,—அழகு - அழகானது,—ஆர் - பொருந்திய,—புதுவை - புதுவையி லெழுந்தருளிய.—பட்டர்பிரான் - பெரியாழ்வார்.—கொண்டாடும் - புகழ்ந்த,—கூடல் - திருக்கூடலென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—அழகா - அழகனென்னுந் திருநாமத்தையுடையவனே,—நின் - உனது,—குறிப்பு - திருவுளப்பாங்கு,— வாழ்விப்பான் - வாழவைக்கும்படி,— எண்ணமோ - கருத்தோ,—வல் - கொடிய,—வினையில் - வினையில்,—இன்னம் - இன்னும்,—என்னை - அடியேனை,—ஆழ்விப்பான் - அழுந்தும்படிசெய்ய,—எண்ணமோ - கருத்தோ,—அஃது அறியேன் - அதனைத் தெரியகில்லேன்—எ-று.

(க-து.) திருக்கூடலழகா! நின் திருவுளப்பாங் கின்னதென அறியேன்—எ-ம். (௩௭)

ஸ்ரீவில்லிபுத்தூர்.

குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ கோதை
நிறந்தவூர் விண்டுசித்தர் நீடூர் - பிறப்பிலியூர்
தாழ்வில்லி புத்தூரென் றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம்.

(இ-ள்) கோதை - சூடிக்கொடுத்த நாச்சியார்,—நிறந்த ஊர் - விளங்கிய ஊராகும்,—விண்டு சித்தர் - பெரியாழ்வார்,—நீடு ஊர் - விளங்கிய ஊராகும்,—பிறப்பு இலி - ஜனனமில்லாத எம்பெருமானது,—ஊர் - ஊராகும்,—தாழ்வு - இழிவையுடைய,—புத்துஊர் - புதிய (ஐந்து) ஊராகிலும்,—இல் - (ஐந்து) வீடாகிலும்,— ஈ என்று - கொடுவென்று,—ஐவர்க்கு - பஞ்சபாண்டவர்களுக்காக,—தான் - தானே,—இரந்தான் - யாசித்தவராகிய விஷ்ணுவானவர்,—வாழ் - நிவாசஞ் செய்கின்ற — வில்லிபுத்தூர் - ஸ்ரீ வில்லிபுத்தூரொன்னும் திவ்வியதேசத்தின்,—வளம் - வளத்தை,—குறித்து - இத்தன்மைத்தென்றுமதித்து,—ஒருவர் - ஒருவர்,—கொண்டாடும் - புகழ்கின்ற,—கொள்கைத்தோ - தன்மையையுடையதோ—எ-று. ஈ-இ எனக் குறுகி நின்றது.

(க-து.) ஸ்ரீ வில்லிபுத்தூரின் சிறப்பித்தன்மைத்தென ஒருவராலுஞ் சொல்லி முடியாது—எ-ம். (௬௮)

திருக்குருகூர்.

வளந்தழைக்க வுண்டாலென் வாசமணத் தாலென்
தெளிந்தகலை கற்றாலென் சீசீ - குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோப னூரொங்கள்
வண்குருகூ ரொன்னாத வாய்.

(இ-ள்) குளிர்ந்த - குளிர்ச்சிபொருந்திய,—பொழில் - சோலைசூழ்ந்த,—குருகு ஊர் - நாரைகள் சஞ்சரிக்கின்ற,—தண் -

குளிர்ந்த,—வாவி - தடாகங்களுள்ள்,—சடகோபன் - சடகோபாழ்வாரது,—ஊர் - நாடாகிய,—வண் - வளப்பம் பொருந்திய,—குருகூர் - திருக்குருகூர்,— என்றோத - என்று சொல்லாத,—வாய் - வாயானது,—சீசீ - சிச்சீ,—வளம் தழைக்க - வண்மை பெருக.—உண்டால் - புசித்ததனால்,—என் - என்னபிரயோசனம்,—வாசம் - பரிமளம்,—மணத்தால் என் - கமழ்வதனால் தான் என்ன,—தெளிந்த - தெளிவாகிய,—கலை - சாஸ்திரத்தை,—கற்றால் என் - பயின்றதனால்தான் என்ன பிரயோசனம்—எ-று.

(க-து.) திருக்குருகூர் என்று சொல்லாத வாய் பிரயோசனமற்றது—எ-ம். (௪௧)

திருத்தொலைவில்லிமங்கலம்.

வாயு மனைவியர்பூ மங்கையர்க ளெம்பிராற்
காயுதங்க ளாழிமுத லைம்படைகள் - தூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவமேனி
மலைவில் லிமங்கலந்த வான்.

(இ-ள்) எம்பிராற்கு - எமது சுவாமிக்கு,—வாயும் - பொருந்திய,—மனைவியர் - தேவியராவார்,—பூமங்கையர்கள் - பூமிதேவியும் இலக்ஷ்மிதேவியுமாம்,—ஆயுதங்கள் - படைக்கலங்களாவன,—ஆழிமுதல் - சக்கரமுதலாகிய,—ஐம்படைகள் - பஞ்சாயுதங்களாம்,—தூய - பரிசுத்தமாகிய,—தொலைவில்லிமங்கலம்,—திருத்தொலைவில்லிமங்கலமென்னும்திவ்விய தேசமானது,—ஊர் - நாடாம்,—தோள் - புயமும்,—புருவம் - புருவமும்,—மேனி - நிறமும்,—(முறையே) மலை - பர்வதமும்,—வில் - தனுசும்,—இமம் கலந்த வான் - நீருண்ட மேகமும் (ஒக்கும்)—

எ-று. ஐம்படைகளாவன:—சங்கு, சக்கரம், கோதண்டம், வாள், தண்டு.

(க-து.) நம்பெருமானுடைய தேவியர் ஆயுதம் நாடு நிற முதலியவை யிவை—எ-ம். (௫0)

ஸ்ரீவரமங்கை.

வானோர் முதலா மரமளவா வெப்பிறப்பும்
ஆனேற் கவதியிட லாகாதோ - தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே
சீவர மங்கையரசே.

(இ-ம்) தேன் - மது,—ஏயும் - பொருந்திய,— பூ - தாமரைக்கமலத்தில் வசிக்கும்,—வர மங்கை - பெரிய பிராட்டியாருக்கும்,—புவிமங்கை - பூமிதேவிக்கும்,—நாயகனே - தலைவனே,—சீவரமங்கை - ஸ்ரீ வரமங்கையென்னுந் திவ்வியதேசத்தெழுந்தருளிய,—அரசே - இறைவனே,—வானோர் முதல் ஆ - தேவர்கள் முதலாக,—மரம்அளவு ஆ - தாவரம்வரையுமுள்ள,—எ பிறப்பும் - எவ்வகைப் பிறவியினும்,—ஆனேற்கு - ஜனித்துவந்த எனக்கு,—அவதி இடல் ஆகாதோ - (இனியேனும்) முடிவு ஏற்படுத்தக்கூடாதோ—எ-று. முதலா அளவா என்பவற்றினீற்றுக்ககரம் தொகுத்தல்.

(க-து.) ஸ்ரீவரமங்கையரசனே! இனி ஜனனம் ஒழித்தல் வேண்டும்—எ-ம். (௫க)

திருப்பேரை.

அரசாகி வையமுழு தாண்டாலு மின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர் - முரைசாருந்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
றன்றிருப்பே ரைப்பதியா தார்.

(இ-ள்) முரசு ஆரும் - வாத்தியங்கள் கோஷிக்கின்ற,—தென் - தெற்கின்கணுள்ள,—திருப்பேரைப்பதியான் - திருப்பேரையென்னும் திவ்வியதேசத்தையுடைய விஷ்ணுவினது,—சீர் - சிறப்பை,—கேட்டு - சிரவணஞ்செய்து,—அவன்தன் - அவனுடைய,—திருப்பேரை - திவ்விய திருநாமங்களை,—பதியாதார் - தரிக்கச்செய்யாதவர்கள்,—அரசு ஆகி - இராஜாவாகி,— வையம் முழுதும் - பூமி முழுவதும்,—ஆண்டாலும் - அரசாட்சிசெய்தாலும்,—இன்பம் - சுகத்தின்,—கரை - கரையை,—சாரமாட்டார்கள் - சேரமாட்டார்கள்—எ-று. கண்டீர்-அசை.

(க-து.) திருப்பேரைப்பதியான் திருநாமங்களை மனதிற் றரிக்கச் செய்யாதவர்கள் இன்பக்கரை சேரார்—எ-ம். (ருஉ)

ஸ்ரீவைகுந்தம்.

தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவ
ணேருடுத்த சிந்தை நிலையறியேன் - போருடுத்த
பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடுஞ்
சீவைகுந்தம் பாடுந் தெளிந்து.

(இ-ள்) தார் - மாலையை,—உடுத்து - அரையிலணிந்து,—தூசு - வஸ்திரத்தை,— தலைக்கு - சிரசில்,—அணியும் - தரித்துக்கொள்ளும்,—பேதை - அறிவில்லாதவளாகிய,—இவள் - இப்பெண்,—நேர் உடுத்த - நேராகக்கொண்ட,—சிந்தை நிலை - மனதின் தன்மையை,—அறியேன் - தெளியமாட்டேன்,—(ஆயினும்) போர் உடுத்த - யுத்தத்திற்கு நெருங்கிய,— பாவை - பெண்ணாகிய தாடகையின்,—குந்தம் - சூலத்தை,—பண்டு - பூர்வத்தில்,—ஒசித்தான் - ஒடித்தவனுடைய,— பச்சை - பசுமையாகிய,—துழாய் - திருத்துழாய் மாலையை,— நாடும் - விரும்பு

வள்,—(ஆதலால்) தெளிந்து - இவ்வுளவைத்தெரிந்து,—ஸ்ரீவை குந்தம் - ஸ்ரீவைகுந்தமென்னும் திவ்விய தேசத்தை,—பாடும் - பாடுங்கள்—எ-று.

(க-து.) நமது பெண்ணுக்கு தாடகை சம்மாரரது திருத்துழாய் மாலையின்மீது ஆசை ஆதலால் அவரது ஸ்ரீவைகுந்தம் பாடுங்கள்—எ-ம். (ருரு)

திருப்புளிங்குடி.

தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந் துயர்போய் விடுமே - யெளியேற்
கருளப் புளிங்குடிவா ழச்சுதனைக் கொண்டு
கருளப்பு ளிங்குவந்தக் கால்.

(இ-ள்) எளியேர்கு - ஏழையாகிய எனக்கு,— அருளா - கிருபை செய்ய,— புளிங்குடிவாழ் - திருப்புளிங்குடி யென்னும் திவ்வியதேசத்தி லெழுந்தருளியிருக்கும்,—அச்சுதனை - விஷ்ணுவை,—கொண்டு - எடுத்துக்கொண்டு,—கருளப்புள் - கருடப்பக்ஷியானது,—இங்கு வந்தக்கால் - இங்கு வந்தால்,—தெளியும் - தெளிந்த,—பசும் - பசிய,— பொன் - அழகிய,—சிறை - அதன் இறகினது,—காற்று - காற்றானது,—வீச - வீச,—விளியும் - இறக்கும்,—துயர் - துன்பமானது,—போய்விடும் - நீங்கும்—எ-று.

(க-து) நம் பெருமானை எடுத்துக்கொண்டு வரும் கருடனது சிறகுக் காற்றுபட்டால் எனது காமநோய் தீரும்—எ-ம்.

திருவரகுணமங்கை.

காலமு நோயுங் கருதாத வன்னைமீர்
வேலன் வெறியை விக்குமின்கண் - மாலாம்

வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு.

(இ-ள்) மங்கை தனக்கு - நமது பெண்ணுக்கு,—மாலாம் - விஷ்ணுவாகிய,— வரகுணமங்கையன் - திருவரகுணமங்கை யென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியவனது,—தாள் - திருவடிகளிற் (சாத்திய),—வண்துழாய்மேல் - வளவிய திருத்துழாய்களின்மீது,—ஆதரகுணம் - ஆசையாகிய குணமுண்டு (ஆதலால்),—காலமும் - பருவத்தையும்,—நோயும் - வியாதியையும்,—கருதாத - நினையாத,—அன்னை மீர் - தாய்மார்களே,—வேலன் - வெறியாட்டாளனது,— வெறியை - ஆவேசத்தை,—விலக்குமின்கள் - நீக்குங்கள்—எ-று. ஆதரகுணமங்கை எ-கு. - ஆசையாகிய குணத்தையுடைய பெண்ணுக்கு எனவுரைப்பினு மமையும்.

(க-து.) அன்னைமீர்! நமது பெண்ணுக்குப் பெருமான் திருத்துழாய்மேல் ஆசை யாதலின் வேலன் வெறியாடலை விலக்குங்கள்—எ-ம். (ருரு)

திருக்குளந்தை.

தனக்குடலம் வேறென் தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டா - னினைக்கிற்
றிருக்குளந்தை யாருரைத்த சீர்க்கீதை பாடுந்
தருக்குளந்தை யாமலிருந் தால்.

(இ-ள்) நினைக்கில் - ஆலோசிக்குமிடத்தில்,—திருக்குளந்தையார் - திருக்குளந்தையென்னுந் திவ்வியதேசத்தையுடையவர்,—உரைத்த - சொல்லிய,—சீர்க்கீதை - சிறந்தபகவற்கீதைய,—பாடும் - பாடுகின்ற,—தருக்கு - சந்தோஷமானது,—உளம் - ஒருவன் மனதில்,—தையாமலிருந்தால் - பதியாமலிருந்தால்,—

தனக்கு - தினக்கு,—உடலம் - தேகமானது,—வேறு ஆன தன்மை,—பிரத்திபேகமான குணத்தை,—உணரான் - அறியான்,—மனம் - நெஞ்சத்திலுள்ள,—கவலை - கிலேசமானது—தீர்ந்து - நீங்கி,—உய்யமாட்டான் - உச்சீவிக்கவுமாட்டான்-எ-று.

(க-து.) பகவற்கீதையை வாசித்துணர்ந்தவனே ஆன்மக்கியானமுற்று முத்தியையடைவன்—எ-ம். (ருசு)

திருக்குறுங்குடி.

தாலத் திழிகுலத்துச் சண்டாள மானாலு
மேலத் தவரதனின் மேன்மைத்தே - கோலக்
குறுங்குடிவாழ் மாயன் குரைகழற்கா ளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு.

(இ-ள்) கோலம் - அழகிய,—குறுங்குடி வாழ் - திருக்குறுங்குடியென்னுந் திவ்வியதேசத்தெழுந்தருளிய,—மாயன் - விஷ்ணுவினது,—குரை - சத்திக்கின்ற,—கழற்கு - சிலம்பணிந்த திருவடிகளுக்கு,—ஆள் ஆகப்பெறும் - அடிமையாகப்பெறுகின்ற,—குடியாய் - வாழ்க்கையினராக,—வாழ்வார் - வாழ்கின்றவர்களுடைய,—பிறப்பு - ஜனனமானது,—தாலத்து - பூமியின்கண்,—இழிகுலத்து - கீழ்ச்சாதியிற் பிறந்த,— சண்டாளம் ஆனாலும் - புலைத்தன்மையினதாயினும்,— மேல - மேன்மையாகிய,—தவரதனின் - தவசிகளைப்பார்க்கிலும்,—மேன்மைத்து - மேன்மையுடையதாகும்—எ-று.

(க-து.) மாயன் கழற்காளாவார் புலையரேனும் தவசிகளினு மேலோராக மதிக்கப்படுவர்—எ-ம். (ருஎ)

திருக்கோளூர்.

பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளு
மிறப்பற்று வாழ விருப்பீர் - புறப்பற்று

தள்ளுங்கோ ளூரரவிற் ருமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்.

(இ-ள்) பிறப்பு அற்று - ஜனனம்நீங்கி,—மூப்பு - விருத்தாப்பியமும்,—பிணி - வியாதியும்,—அற்று - நீங்கி,—நாளும் - எப்போதும்,—இறப்பு அற்று - மரணமும் நீங்கி,—வாழ இருப்பீர் - வாழும்படியிருக்கின்றவர்களே,— புறப்பற்று - வெளிப்பற்றுகளை,—தள்ளுங்கோள் - நீக்குங்கள்,—ஊர்-நகருகின்ற,—அரவில் - ஆதிசேடன்மீது,—தாமோதரன் - விஷ்ணுவானவர்,—பள்ளிகொள்ளும் - சயனித்திராநின்ற,— கோளூர் - திருக்கோளூரென்னுந் திவ்வியதேசத்தை,— மருவுங்கோள் - சேருங்கள்—எ-று.

(க-து.) பிறப்பு, மூப்பு, பிணி, மரண மற்றுவாழ விருப்பீர் திருக்கோளூரைச் சேருங்கள்—எ-ம். (நிஅ)

பாண்டிநாடு முற்றிற்று.

மலைநாட்டுத் திருப்பதிகள். கரு.

திருவனந்தபுரம்.

கோளார் பொறிஐந்துங் குன்றியுடலம் பழுத்து
மாளாமுன் னெஞ்சே வணங்குதியால் - கேளார்
சினந்தபுரஞ் சுட்டான்றிசை முகத்தான் போற்று
மனந்தபுரஞ் சேர்ந்தா னடி.

(இ-ள்) நெஞ்சே - மனமே,—கேளார் - பகைவராது,—சினந்த - கோபித்த,—புரம்சுட்டான் - திரிபுரத்தைத் தகித்த ருத்திரனும்,—திசை முகத்தான் - பிரமனும்,—போற்றும் - துதிக்

கும்,—அனந்தபுரம் - திருவனந்தபுரமென்னுந் திவ்வியதேசத்தை,—சேர்ந்தான - சேர்ந்த சுவாமியின்,—அடி - சரணங்களை,—கோள் ஆர் - தீமைபொருந்திய,—பொறி ஐந்தும் - ஐம்பொறிகளும்,—குன்றி - அழிந்து,—உடலம் - தேகமானது,—பழுத்து - தளர்ச்சியடைந்து,—மாளாமுன் - இறக்குமுன்னம்,—வணங்குதி - நமஸ்கரிப்பாயாக—எ-று. ஆல்-அசை.

(க-து.) நெஞ்சே! திருவனந்தபுரஞ் சேர்ந்தா னடிகளை உடலமாளாமுன் வணங்கு—எ-ம். (ருக)

திருவண்பரிசாரம்.

அடியுங் குளிர்ந்தா ளறிவுங் குலைந்தாண்
முடிகின்றாண் மூச்சடங்கு முன்னே - கடிதோடிப்
பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரங்கிடந்த மாற்கு.

(இ-ள்) அடியும் குளிர்ந்தாள் - பாதமுங்குளிர்ந்தாள்,—அறிவும் குலைந்தாள் - உணர்வும் அழிந்தாள்,—முடிகின்றாள் - இறக்கின்றவளுடைய,—மூச்சு அடங்கு முன்னே - சுவாசம் ஒடுங்குவதற்கு முன்னம்,—கடிது ஓடி - தீவிரமாகச்சென்று,—வண்பரிசாரம் - திருவண்பரிசார மென்னுந் திவ்வியதேசத்தில்,—கிடந்த - சயனித்த கோலங்கொண்ட,—மாற்கு - மஹாவிஷ்ணுவுக்கு,—பெண்பரிசு - பெண்ணினது தன்மையை,—அங்கு - அவ்விடத்து,—பிறப்பித்து - விளங்கும்படிசொல்லி,—மீளுவார் - திரும்பவல்லவர்,—ஆர் - யாவர்—எ-று.

(க-து) நமது பெண்ணிறக்குமுன் திருவண்பரிசாரத் திருமாலுக்கு விளங்க வுரைத்துத் திரும்ப வல்லவ ரியாவர்—எ-ம்.

திருக்காட்கரை.

மார்க்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமு
மேற்க வுரைப்பார்சொ லெண்ணாதே - தோற்குரம்பை

நாட்கரையா முன்னமே நன்னெஞ்சே நாரணனுங்
காட்கரையாற் காளாகாய் காண்.

(இ-ள்) நல் நெஞ்சே - நல்ல மனமே,—மார்க்கமும் - அவரவர் சமயத்தையும்,—தாம்தாம் - அவரவர்,—வழிபடும் - வணங்கும்,—தெய்வமும் - கடவுளையும்,—ஏற்க - பொருந்த,—உரைப்பார் - வசனிக்கின்றவர்களுடைய,—சொல் - வார்த்தையை,—எண்ணாதே - மதியாதே,—தோல் குரம்பை - சருமமூடிய வுடலின்,—நாள் - ஆயுள்நாட்கள்,—கரையாமுன்னமே - கழிவதற்குமுன்னமே,—நாரணன் ஆம் - ஸ்ரீமந்நாராயணனாகிய,— காட்கரையார்க்கு - திருக்காட்கரை யென்னுந் திவ்விய தேசத்திலெழுந்தருளியவருக்கு,—ஆள் ஆகாய் - அடிமையாகக் கடவாய்—எ-று.

(க-று) நெஞ்சே! அயுள் நாட்கள் கழியுமுன்னம் திருக்காட்கரையானுக்கு ஆளாகுவாய்—எ-ம். (சுக)

திருமூழிக்களம்.

காண்கின்ற வைம்பூதங் கட்குமிரு சுடர்க்குஞ்
சேண்கலந்த விந்திரர்க்குந் தேவர்க்கு - மாண்சரிய
பாழிக் களத்தார்க்கும் பங்கயத்து நான்முகர்க்கு
மூழிக் களத்தான் முதல்.

(இ-ள்) காண்கின்ற - பார்க்கின்ற,—ஐம்பூதங்கட்கும் - பஞ்சபூதங்களுக்கும்,—இருசுடர்க்கும் - சூரிய சந்திரர்களாகிய இருவருக்கும்,—சேண் கலந்த,—தேவலோகத்திலிருக்கும்,—இந்திரர்க்கும் - தேவேந்திரனுக்கும்,—தேவர்க்கும் - கடவுளர்க்கும்,—மாண் - மாட்சிமைபொருந்திய,—சரிய - கருத்த,—பாழி - சிறந்த,—களத்தார்க்கும் - கண்டத்தையுடைய ருத்திரனுக்கும்,—பங்கயத்து - தாமரையில் வசிக்கும்,—நான்முகர்க்கும் - பிரமனு

க்கும்,— மூழிக்களத்தான் - திருமூழிக்களத்திலெழுந்தருளிய ஸ்ரீ அப்பதியே,—முதல் - முதன்மையானவன்—எ-று.

(க-து.) திருமூழிக்களத்தானே யாவர்க்கும் முதற்றெய்வம்—எ-ம். (கூ௨)

திருப்புலியூர்.

முதல் வண்ணமாமே முலைவண்ண முன்னே
விதிவண்ண நீங்கி விடுமே - சதுரத்
திருப்புலியூர் நின்றான் றிருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின்.

(இ-ள்) சதுரம் - பெருமை பொருந்திய,—திருப்புலியூர் - திருப்புலியூரென்னுந் திவ்விய தேசத்தில்,—நின்றான் - நின்ற திருக்கோலங் கொண்டவனுடைய,—திரு - சிறந்த,—தண்டுழாயின் - குளிர்ந்த துழாய் மாலையினது,— மரு - வாசனையை,—புலி=புல்லி - பொருந்தி,—ஊர் - தவழ்கின்ற,—தென்றல் - தென்றற் காற்றானது,—வரின் - வந்தால்,—முலைவண்ணம் - (நமது பெண்ணுக்கு) தனத்தின் நிறமும்,—முதல் வண்ணம் - முன்னிருந்த நிறம்,— ஆம் - வரும்,—முன்னே விதி வண்ணம் - பூர்வ விதிவசமும்,—நீங்கிவிடும் - நீங்கும்—எ-று.

(க-து.) திருப்புலியூரானுடைய துழாய்மணம் படிந்த தென்றல் வீசின் நம்பெண்ணுக்கு முலையின் நிறம் முன்னிறமாம் அவள் விதிவசமும் ஒழியும்—எ-ம். (கூ௩)

திருச்செங்குன்றூர்.

வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே யுயிர்மாயும் போழ்து - பரமேட்டி
செங்குன்றூர் மாலேசிறைப் பறவைமேற் கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து.

(இ-ள்) பரமேட்டி - மிக்கதயாளுவே!,—செங்குன்றூர்மாலே - திருச்செங்குன்றூரி லெழுந்தருளிய விஷ்ணுவே,—மதி

- புத்தியானது,—கலங்கி - மயங்கி,— விக்குள் - விக்கலான து,—பொர - போர்செய்ய (வருத்த),— உயிர் - பிராணனான து,—மாயும்போழ்து -நசிக்கும் போது,—சிறை - இறகுகளையு டைய,—பறவைமேல் - கருடன் மீது,—கனகம் பைம் குன்று- பசிய பொன் மலையின்மேல்,—ஊர் - தவழ்கின்ற,— கார்போ ல் - மேகம்போல,—பறந்து- விரைந்து,—வரவேண்டும் - தரிச னந்தரவரவேண்டும்—எ-று. கண்டாய்- அசை.

(க-து.) திருச்செங்குன்றூர் மாலே! உயிர்மாயும்போது கருடன் மீது விரைந்து வரவேண்டும்—எ-ம். (௪௪)

திருநாவாய்.

பறந்து திரிதரினும் பாவியே னுள்ள
மறந்தும் பிறிதறிய மாட்டா - சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல் லாலென்
னொருநாவாய் வாழ்த்தா துகந்து.

(இ-ள்) பறந்து - விரைவாகச் சென்று,—திரிதரினும் - திரிந் தாலும்,—பாவியேன் - தீவினையினேனாகிய எனது,—உள்ள ம் - மனமானது,—மறந்தும் - பொச்சாந்தும்,—பிறிது - வே றொன்றையும்,—அறியமாட்டா - தெரிந்து கொள்ளாது,—சிறந் த - மேன்மைதங்கிய,—திருநாவாய் வாழ்கின்ற - திருநாவா யெ ன்னுந் திவ்விய தேசத்தி லெழுந்தருளி யிருக்கின்ற,—தேவனை அல்லால் - திருமாலையல்லாமல்,—என் - எனது,—ஒரு நாவா ய் - ஒன்றாகிய நாவோடுகூடிய வாயானது,—உகந்து - விரும் பி,—வாழ்த்தாது - துதியாது—எ-று.

(க-து.) எனது வாய் திருநாவாய்த் தேவனையல்லாது பிறி தொன்றையும் துதியாது—எ-ம். (௪௫)

திருவல்லவாழ்.

உகந்தார்க்கெஞ் ஞான்று முளனா யுகவா
திகந்தார்க் கெஞ்ஞான்று மிலனாய்த் - திகழ்ந்திட்
டருவல்ல வாழுருவமல்ல வெனநின்றான்
றிருவல்ல வாழுறையுந் தே.

(இ-ள்) திருவல்லவாழ் உறையும் - திருவல்லவாழ் என்னுந் திவ்வியதேசத்தெழுந்தருளிய,—தே - சுவாமியானவர்,—உகந்தார்க்கு - (தன்னை) விரும்பினவர்களுக்கு,—எஞ்ஞான்றும் - எக்காலத்தும்,—உளன் ஆய் - உள்ளவனாயும்,—உகவாது - விசுவாசியாது,—இகந்தார்க்கு - பழித்தவர்களுக்கு,—எஞ்ஞான்றும் - எக்காலத்தும்,—இலன் ஆய் - இல்லாதவனாகியும்,—திகழ்ந் திட்டு - விளங்கி,—அரு அல்ல - அருவமுமல்ல,—வாழ் - வாழ்கின்ற,—உருவம் அல்ல - உருவமும் அல்ல,— என - என்றுசொல்லும்படி,— நின்றான் - நின்றனன்—எ-று.

(க-து.) திருவல்லவாழிலெழுந்தருளியகடவுள்அவரவர்க்குத்தக்கபடிநிற்பன்.—எ-ம். (சுசு)

திருவண்வண்டூர்.

தேவு முலகு முயிருந் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர் - பூவிற்
றிருவண்வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால்.

(இ-ள்) பூவில் - பூமியின் கண்,—திருவண்வண்டூர் - திருவண்வண்டூ ரென்னுந் திவ்வியதேசத்தில்,— உறையும் - எழுந்தருளியிருக்கும்,—தேவாதி தேவன் - தேவர்களுக் கெல்லா முதன்மையாகிய கடவுளும்,—மரு - வாசனை தங்கிய,—வண் - வளப்பம் பொருந்திய,—வண்டு ஊர் - வண்டுகளுலவும்,—துளவம்-

துளப மாலையை யணிந்த,—மால் - விஷ்ணுவே,—தேவும் - தேவர்களையும்,—உலகும் - உலகத்தையும்,—திரிந்து நிற்கும் - சஞ்சரித்து நிற்கும்,—யாவும் - எல்லாவற்றையும்,—படைத்த - சிருஷ்டித்த,—இறை - கடவுளாகும்—எ-று. கண்டீர் - அசை. க்ஷேத்திரத்தின் பெயர் வண்டூர் எனக்கொண்டு - பூவில் - திரு அண் வண்டூர்—எ-ரு. பூமியின்கண் இலக்குமி விலாசம் பொருந்திய திருவண்டூர் என வுரைப்பாரு முளர்.

(க-து.) திருவண்வண்டூர் மாலே யாவும் படைத்தவர்-எ-ம்.

திருவாட்டாறு.

மாலைமுடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று - சாலவுநான்
கேட்டாற் றுயிலேன்காண் கேசவனே பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய்.

(இ-ள்) கேசவனே - கேசவனென்னுந் திருநாமத்தை வாய்ந்தவனே,—பாம்பு அணைமேல் - சேஷ சயனத்தின் மீது,—வாட்டாற்று - திருவாட்டாறு என்னுந் திவ்விய தேசத்தில்,—கண் துயில் கொள்வாய் -திருக்கண்வளர்பவனே,—மாலை - பூமாலையையும்,—முடி - கிரீடத்தையும்,—நீத்து - நீக்கிவிட்டு,—மலர் பொன் அடி - அழகிய தாமரைமலர்போன்ற பாதங்கள்,—நோவ - வருந்த,—பாலை வனம் - பாலைவனத்தில்,—பண்டு நீ புகுந்தாய் - முன்னம் நீ சென்றனை,—என்று - என்றுசொல்ல,—சாலவும் - மிகவும்,—நான் - யான்,—கேட்டால் - கேள்விப்பட்டால்,—துயிலேன் - நித்திரை செய்யேன்—எ-று.
காண் - அசை.

(க-து,) திருவாட்டாற்றுத் திருக்கண்வளர்பவனே ! நீ முன் வனம்புகுந்தமையைக்கேள்விப்பட்டால்துயிலேன்—எ-ம்.(கூஅ)

திருவிற்றுவக்கோடு.

வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட - கூத்தன்
றிருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவி
கருவிற் றுவக்கோடுங் காண்.

(இ-ள்) நெஞ்சமே - மனமே !,—வாய்த்த - செய்யக்கிடைத்த,—கருமம் - தொழில்,—இனி மற்று இல்லை - இனி வேறொன்றுமில்லை,—தோய்த்த தயிர் - உறைந்த ததியையும்,—வெண்ணெய் - நவநீதத்தையும்,— தொட்டு - கையால் எடுத்து,—உண்ட - புசித்த,—கூத்தன் - திருவிளையாட்டை யுடையவனது,—திருவிற்றுவக்கோடு - திருவிற்றுவக்கோடு என்னுந் திவ்விய தேசத்தை,—சேர்ந்தால் - அடைந்தால்,—பிறவி - ஜனனத்தை விளைக்கும்,—கருவின் - கருவினது,—துவக்கு - தொந்தனை யானது,—ஓடும் - நீங்கும்—எ-று. காண் - அசை.

(க-து.) நெஞ்சமே! திருவிற்றுவக்கோடு சேர்ந்தால் கருவின் தொந்தனைநீங்கும்—எ-ம் (சுகூ)

திருக்கடித்தானம்.

காண விரும்புமென் கண் கையுந்தொழ விரும்பும்
பூண விரும்புமென்றன் புன்றலைதான் - வாணன்
றிருக்கடித்தா னத்தான் றிகிரியான் றண்டான்
றிருக்கடித்தா னத்தானைச் சென்று.

(இ-ள் வாணன் - வாணசூரனது,—திருக்கு - மாறுபாட்டை,—அடித்தான் - ஒழித்தவனும்,—நத்தான் - பாஞ்சசந்நியத்தை யுடையவனும்,—திகிரியான் - சக்கரத்தை யுடையவனும்,—தண்டான்- தண்டையுடையவனும்,—திருக்கடித்தானத்தானை - திருக்கடித்தான மென்னுந் திவ்வியதேசத்தை யுடையவனு

மாகிய விஷ்ணுவை,—சென்று - போய்,—என்கண் - என நேத்திரங்களானவை,—காண - தரிசிக்க,—விரும்பும் - ஆசை கொள்ளும்.—கையும் - என துகரங்களும்,—தொழ - அஞ்சலி செய்ய,—விரும்பும் - இச்சிக்கும்,—என்றன் - என்னுடைய,—புல் தலைதான - அற்பமாகியசிரசும்,—பூண - (அவரது திருவடியைச்) சூடிக்கொள்ள,—விரும்பும் - ஆவல்கொள்ளும்—எ-று.

(க-ரு.) திருக்கடித்தானத்தானைச் சென்று காண என்கண்ணும், தொழ என்கையும், சூடிக்கொள்ள என்சிரசும், விருப்பங் கொள்ளும்—எ-ம். (எ0)

திருவாறன்விளை.

சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்று புலனைந்தடக்கி விட்டாலு - மின்றமிழான்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
யாறன் விளைத்திருமா லன்பு.

(இ-ள்) சென்று - (நதிதீரங்களிற்) போய்,—புனல் - ஜலத்தில்,—மூழ்கி - குளித்து,—செய் தவங்கள் - உக்ரற்றுந்தபசுகளை,—செய்தாலும் - புரிந்தாலும்,—வென்று - (ஆசோத்தியைய ங்களிற் செல்வதினின்றும்)ஜயித்து,—புலன்ஐந்து - ஐம்புலன்களையும் - அடக்கிவிட்டாலும் - செல்லாமற் றவிர்த்தாலும்,—இன் தமிழால் - இனிய தமிழ்ப்பாசுரங்களினால்,— மாறன் - நம்மாழ்வார்,—விளைத்த - (உற்பத்திசெய்த) சொல்லிய,—மறை - வேதத்தை,— ஓதார்க்கு - பாராயணஞ் செய்யாதவர்களுக்கு,—ஆறன் விளை - திருஆறன்விளை யென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளி யிருக்கும்,—திருமால் - மஹாவிஷ்ணுவுக்கு,— அன்பு - பத்தி செலுத்துதல்,— இல்லை - இல்லையாகும்—எ-று.

(க-து.) திருவாறன்விளைத் திருமாலன்பு நம்மாழ்வாரது தமிழைப் பாராயணஞ் செய்யாதார்க் கில்லை—எ-ம். (எக)

மலைநாடு முற்றிற்று.

நடுநாட்டுத்திருப்பதிகள். உ.

திருவையிந்திரபுரம்.

அன்பணிந்த சிந்தையரா யாய்ந்தமலர்தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே - யென்ப
ரெமையிந்திர புரத்தார்க் கின்றொண்ட ரானார்
தமையிந் திரபுரத்தார் தாம்.

(இ-ள்) எம் - எமது,—ஐயிந்திரபுரத்தார்க்கு - திருவையிந்திரபுர மென்னும் திவ்விய தேசத்தி லெழுந்தருளியவருக்கு,—இன் - (இனிய) உகந்த,—தொண்டர் ஆனார்தமை - தாசபூத ரானவர்களை,—இந்திர புரத்தார் தாம் - தேவலோகத்தி லுள்ளவர்கள்,—அன்பு அணிந்த-பத்தியோடுகூடிய,—சிந்தையராய் - உள்ளத்தை யுடையவர்களாய்,—ஆய்ந்த - ஆராய்ந்தெடுத்த,—மலர் - புஷ்பங்களை,—தூவி - சொரிந்து,—முன்பணிந்து - முன்னேநமஸ்கரித்து,—நீர்-தேவரீரே,—எமக்கு-எங்களுக்கு,—மூர்த்தியர் - கடவுளராவார்,—என்பர்-என்று துதிப்பார்கள்.

(க-து.) திருவையிந்திரபுரத்தார்க் கடியராவாரை இந்திரபுரத்தார்வணங்குவர்—எ-ம். (எஉ)

திருக்கோவலூர்.

தாமனையா ளாதியராய்த் தாவரங்க ளீறான
சேம வுயிருஞ் செகமனைத்தும் - பூமடந்தைக்

காங்கோவ லாயுதன்பின் ஞக வவதரித்த
பூங்கோவ் லாயன் பொருள்.

(இ-ள்) தாமரையான்ஆதியாய் - பிரமன்முதலாக,—தாவர ங்கள்ஈறுஆன - தாவரங்களிறுதியாகிய,—சேமம் - காவலோ கூடிய,—உயிரும் - பிராணிகளும்,—செக மனைத்தும் - எல்லா வுலகங்களும்,—பூமடந்தைக்கு - தாமரைக் கமலத்தில் வசிக்கு ம் மஹாலக்ஷ்மிக்கு,—ஆம்கோ - உகந்த தலைவரும்,—அலா யுதன்பின்ஞக-கலப்பையாயுதத்தையுடையபலராமருக்குப் பின் ஞக,—அவதரித்த - திருவவதாரஞ்செய்த,—பூம் - அழகிய,— கோவல் - திருக்கோவலூ ரென்னுந் திவ்வியதேசத்தி லெழுந் தருளியிருக்கும்,—ஆயன் - (கோபாலராகிய) விஷ்ணுவினது,— பொருள் - சிருட்டிப்பொருளாகும் - எ-று.

(க-து.) பிரமன்முதல்தாவரமீருய்ப்பூங்கோவல் ஆயன் சிரு ட்டிப்பொருள்கள்—எ-ம். (எங)

நடுநாடு முற்றிற்று.

தொண்டைநாட்டுத்திருப்பதிகள். உஉ

திருக்கச்சி - அத்திகிரி.

பொருளாசை மண்ணுசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித்திராதே - யருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர் கண்ணன்ரு
ளிச்சித் திருப்பதியா மென்று.

(இ-ள்) அருள் ஆளன் - கிருபாளுவும்,—கச்சித் திருப்பதியா ம்அத்தியூர் - காஞ்சிக்ஷேத்திரமாகிய அத்திகிரியி லெழுந்தருளி

ய,—கண்ணன் - கமல லோசனனது,—தாள் - திருவடியை,—யாம் - நாம்,—இச்சித் திருப்பது - விரும்பியிருக்க வேண்டிவது,—என்று - என்று கருதி,—பொருள் ஆசை - திரவிய இச்சையையும்,—மண் ஆசை - காணி இச்சையையும்,—பூம் - அழகிய,—குழலார் - கூந்தலையுடைய மடவாரது,—போகத்து - சம்போகத்தினது,—இருள்ஆசை - அந்தகாரமாகிய இச்சையையும்,-சிந்தித்து - நினைத்து,—இராதே - இருக்கவேண்டாம்-எ-று.

சிந்தித்திராதே எ-கு. நினையாமல் — எ-ம். இச்சித் திருப்பது யாம் என்று எ-கு. யாம் விரும்பியிருப்பது எக்காலம்—எ-ம். பொருளுரைப்பினு மமையும்.

(க-து.) பொன், நிலம், மாதர் ஆகிய மூன்றி னாசையையும் ஒழித்துவிடு. நாம் விரும்பியிருக்கக் கடவது கண்ணன் றாளென்று கருது—எ-ம். (எசு)

திருவட்டபுயங்கம்.

என்றுந் துயருழக்கு மேழைகா ணீங்களிளங்
கன்றுபோற் றுள்ளிக் களித்திரி - ரன்றுநட
மிட்டபுயங்கத் திருசரண மேசரணென்
றட்டபுயங் கத்தர்க் காளாய்.

(இ-ள்) என்றும் - எக்காலத்தும்,—துயர் - துன்பமாகிய.—உழக்கும் - வருத்துகின்ற,— ஏழைகாள் - ஏழைகளே,—நீங்கள் - நீங்கள்,—அன்று - முற்காலத்தில்,— புயங்கத்து - காளிங்க னென்னுஞ் சர்ப்பத்தின்மீது,—நடம் இட்ட - நிருத்தனம் செய்த,—இரு சரணமே - உபய பாதங்களே,—சரண் என்று - புகலிடமென்று,—அட்டபுயங்கத்தர்க்கு - திருவட்டபுயங்கமென்னுந் திவ்விய தேசத்தையுடையவருக்கு,—ஆள் ஆய் -

அடிமையாகி,—இளம்கன்றுபோல் - இளமைபொருந்தியகன்றைப்போல்,—துள்ளி - குதித்து,—களித்து இரீர் - சந்தோஷித்திருக்கமாட்டீர்கள் (என்னோ?)—எ-று.

(க-து.) ஏழைகாள்! திரு அட்டபுயங்கத்தார்க் காளாய்க் களித்திராதகாரணம் யாது? எ-ம். (எரு)

திருத்தண்கா.

ஆட்பட்டே னைம்பொறியா லாசைப்பட்டே னறிவுங்
கோட்பட்டு நாணங் குறைபட்டேன் - சேட்பட்ட
வண்காவை வண்டுவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் றனக்கு.

(இ-ள்) சேண்பட்ட - தேவலோகத்தி லுள்ள,—வண்காவை - வளவிய கற்பகவிருக்ஷத்தை,—வண் - அழகிய,—துவரை - துவாரகாபுரியில்,—வைத்த - கொண்டுவந்துநட்ட,—விளக்கு ஒளிக்கு - தீபச்சுடர்போன்றவனும்,—தண்காவை - திருத்தண்காவென்னுந் திவ்வியதேசத்தை,—சேர்ந்தான்தனக்கு - சேர்ந்தவனுமாகிய சுவாமிக்கு,—ஆட்பட்டேன் - அடிமைப்பட்டேன்,—ஐம்பொறியால் - மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பஞ்சேந்திரியங்களாலும்,—ஆசைப்பட்டேன் - விருப்பங்கொண்டேன்,—அறிவும் - புத்தியும்,—கோள்பட்டு - குழப்பமடைந்து,—நாணம் - வெட்கமும்,—குறைபட்டேன் - குறைந்தவனாயினேன்—எ-று.

(க-து.) திருத்தண்காவைச் சேர்ந்தசுவாமின் மீது காதல்கொண்டு அடிமைப்பட்ட யான் அறிவு கோட்பட்டு நாணமுங் குறைந்தவனாயினேன்—எ-ம். (எசு)

திருவேளுக்கை.

தனக்குரிய னாயமைந்த தானவர்கோன் கெட்டா
னுனக்குரிய னாயமைந்த னுய்ந்தா - னினைக்குங்கால்

வேளுக்கை யாளரியே வேறுதவி யுண்டோவுன்
றாளுக்கா ளாகா தவர்க்கு.

(இ-ள்) தனக்கு உரியனாய் - (சர்வ சுதந்தரமும்) தனக்கே யுடையவனாய்,—அமைந்த - பொருந்திய,—தானவர்கோன் - அசுரேந்திரனாகிய இரணியன்,—கெட்டான் - அழிந்தான்,— உனக்கு - தேவரீருக்கே - உரியன்ஆய - உரித்தானவனாகிய,—மைந்தன் - பிரகலாதாழ்வான்,—உய்ந்தான் - பிழைத்தான்,— (ஆதலால்) - நினைக்குங்கால் - யோசிக்குமளவில்,— வேளுக்கை - திருவேளுக்கையென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—ஆள்அரியே - நரசிம்மமூர்த்தியே,—உன் - உனது,—தாளுக்கு - திருவடிக்கு,—ஆள் ஆகாதவர்க்கு - தொண்டராகாதவர்களுக்கு,—வேறு உதவி - வேறு துணை,—உண்டோ - உள்ளதோ—எ-று.

(க-து.) திருவேளுக்கை நரசிம்மமூர்த்தியே! உன் திருவடிக்காளாகா தவர்க்கு வேறு துணை இல்லை—எ-ம். (எஎ)

திருப்பாடகம்.

தவம்புரிந்த சேதனரைச் சந்திரனா தித்தன்
சிவன்பிரம னிந்திரனாச் செய்கை - யுவந்து
திருப்பா டகமருவுஞ் செங்கண்மா றன்மார்
பிருப்பா டகவுரையா லே.

(இ-ள்) தவம்புரிந்த - தவத்தைச்செய்த,—சேதனரை - அறிவுடையோரை,—சந்திரன்ஆ - மதியமாகவும்,—ஆதித்தன்ஆ - சூரியனாகவும்,—சிவன்ஆ - உருத்திரனாகவும்,—பிரமன்ஆ - பிரமனாகவும்,—இந்திரன்ஆ - தேவேந்திரனாகவும்,—செய்கை - செய்குதல்,—உவந்து - சந்தோஷித்து,—திருப்பாடகம் - திருப்பாடக மென்னுந் திவ்வியதேசத்தை,—மருவும் - பொருந்

திய,—செங்கண்மால்தன் - செங்கமலநேத்திரனாகிய விஷ்ணுவி னது,—மார்பு இருப்பாள்- வக்ஷத்தானத்து நிவாசஞ்செய்யும் பி ராட்டியினுடைய;—தக - தகுதியாகிய,—உரையாலே - சொல் லினாலேயாம்—எ-று. சேதனரை - எ-கு. ஆன்மாக்களை எ னினு மமையும். அவை நான் கிடத்துங்கூட்டுக.

(க-து.) திருப்பாடகமருவுமால் பிராட்டியாரு ரையினாலே யே தவம்புரிவோரைச் சூரியன் சந்திரன் முதலியோராகச் செ ய்குவர்—எ-ம். (எஅ)

திருநீரகம்.

ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெவ்வகைநீ காட்டினாய் - ஞாலத்துண்
ணீரகத்தாய் நின்னடியே னெஞ்சகத்தாய் நீண்மறையின்
வேரகத்தாய் வேதியர்கு மீண்டு.

(இ-ள்) ஞாலத்துள் - பூமியில்,—நீரகத்தாய் - திருநீரகமெ ன்னுந் திவ்வியதேசத்தையுடையவனே,—நின் அடியேன் - நின து தாசனாகிய எனது,—நெஞ்சகத்தாய் - மனதி னிடமானவ னே,—நீள் மறையின்-நெடிய வேதங்களினது,—வேர் அகத்தா ய் - மூலப்பொருளானவனே,—வேதியர்கு - மார்க்கண்டேய முனிவருக்கு,—மீண்டு - மறுபடியும்,—ஆலத்துஇலை - வடபத்தி ரத்தில்,—சேர்ந்து - பொருந்தி,—அழி - அழிந்த,—உலகை - உ லகத்தை,—உள்புகுந்த காலத்தில் - உள்ளேபிரவேசித்தகாலத்தி ல்,—எவ்வகை - எந்தப்பிரகாரம்,—நீ காட்டினாய் - நீ தரிசன ப்படுத்தினாய்—எ-று.

(க-து.) திருநீரகத்தாய்! நீ வடபத்திர சாயியா யிருந்தகால த்து உனக்குட்புகுந்த மார்க்கண்டேயருக்கு அழிந்த வுலகத்தை எங்ஙனம் காட்டினாய்—எ-ம். (எகூ)

திருநிலாத்திங்கட்டுண்டம்.

மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூ
பாண்டரங்க மாடி படர்சடைமேற் - றீண்டிக்
கலாத்திங்கட் டுண்டத்தின் மீதிருப்பக் கண்டு
நிலாத்திங்கட் டுண்டத்தா னே.

(இ-ள்) நிலாத்திங்கட்டுண்டத்தானே - திருநிலாத்திங்கட்டுண்டமென்னுந் திவ்விய தேசத்தை யுடையவனே,—நின் அடி - உன்னுடைய திருவடிகளில் (அருச்சுனனால் அருச்சிக்கப்பட்ட),—பூ - பூக்களானவை,— பாண்டரங்கம் ஆடி - பாண்டரங்கமென்னுங் கூத்தினை யாடிய ருத்திரனது,— படர் - பரந்த,— சடைமேல் - சடாபாரத்தின்மீது,— தீண்டி - பொருந்தி,—கலா - கலைகளையுடைய,— திங்கள் துண்டத்தின் மீது - மூன்றாம் பிறைச் சந்திரனுக்குமேல்,— இருப்ப - இருக்க,—கண்டும் - பார்த்திருந்தும்,—மேதினியோர் - பூமியிலுள்ளவர்கள்,—மீண்டும் - மறுபடியும்,— தெளியார்கள் - தெரிந்து கொள்ளார்கள்—எ-று.

(க-து.) திருநிலாத்திங்கட்டுண்டத்தானே! நின்னடியிற் சாத்திய பூவானது ருத்திரனுடைய சடையின்மீ திருக்கக்கண்டும் மேதினியோர் தெளியாத காரணம் யாதோ?—எ-ம். (௬௨)

திருவூரகம்.

நேசத்தா லன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தா ளொன்றலைமேல் வைத்திலையே - யூசத்தாற்
பாரகத்துளன்றி நான்பாழ்நரகில் வீழ்ந் தேன்கொ
லூரகத்து ணின்று யுரை.

(இ-ள்) நேசத்தால் - அன்பினால்,—அன்று - வாமனாவதாரங்கொண்டகாலத்து,—உலகை - உலகத்தை,—நீர்வார்க்க - தாரைநீர் வார்க்க,— வைத்து அளந்த - வைத்து அளவிட்ட,— வாசம் - பரிமளம் பொருந்திய,—தாள் - பாதப்போதை,—என் தலைமேல் - எனது சிரசின்மீது,—வைத்திலையேல் - வைக்காமல் விடுவையாமாகில்,—நாசத்தால் - நாசத்தினால்,—பார் அகத்துள் அன்றி - பூமியில் [மாத்திரமல்லாமல்,—நான் - யான்,—பாழ் - பாழாகிய,—நரகில்-நரகத்திலும்,—வீழ்ந்தேன் - விழுந்தவனாவேன்,—ஊரகத்துள் - திருவூரகமென்னுந் திவ்விய தேசத்தில்,—நின்றாய் - நின்ற திருக்கோலங்கொண்டவனே,—உரை - சொல்லுவாயாக—எ-று. வாசத்தாள் என்றதனால் போது வருவிக்கப்பட்டது. கொல் அசை.

(க-து.) திருவூரகத்தாய்! உன் திருவடிப்போதென் முடியிற் சூட்டின் உய்வேன்—எ-ம். (அக)

திருவெஃகா.

உரைகலந்த நூலெல்லா மோதி யுணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாந் - தரையிற்
றிருவெஃகா மாயனுக்கே சீருறவாந் தங்க
ளுருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு.

(இ-ள்) தரையில் - பூமியில்,—திருவெஃகா - திருவெஃகாவென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—மாயனுக்கே - மாயனென்னுந் திருநாமத்தினை யுடையவனுக்கே,— சீர் உறவாம் - சிறந்தவுறவாகிய,— தங்கள் - தங்களது,— உரு - உடலை,—வெஃகா - விரும்பாத,— உள்ளத்தினோர்க்கு - மனதை யுடையவருக்கு,—உரைகலந்த - உரையோடுகூடிய,—நூல் எல்லாம் - சாத்திரங்களை யெல்லாம்,—ஓதி - கற்று,—உணர்ந்தா

லும் - அறிந்தாலும்,—பிணைகலந்த - பிணைசேர்ந்த,—பால் போல் - க்ஷீரத்தைப்போல,—பிறிது ஆம் - வேறாகும்—எ-று.

(க-து.) தேகாபிமானம் விட்டு திருவெஃகா மாயனுக் குற வாகுமவர் உணைகலந்த நூலெல்லாம் ஓதி யுணர்ந்தாலும் பிணை கலந்த பால்போற் பிறிதாவர்—எ-ம். (அஉ)

திருக்காரகம்.

ஓராதார் கல்வியுடையேங் குலமுடையே
மாரா தனமுடையேம் யாமென்று - சீராயன்
பூங்கார கங்காணப் போதுவார் தாடலைமேற்
றாங்கா ரகங்காரத் தால்.

(இ-ள்) ஓராதார் - தெளிவில்லாதவர்கள்,—கல்வியுடையே ம் - யாம்வாசித்திருக்கின்றோம்,—குலமுடையேம்-யாம் உயர்ந் குலஸ்தர்,—யாம் ஆரா தனம் உடையேம் - யாம் மிக்க செல் வமுடையோம்,—என்று - என்று கருதி,—சீர் - சிறந்த,—ஆய ன் - கோபால கிருஷ்ணரது,—பூம் - அழகிய,—காரகம் - தி ருக்காரக மென்னுந் திவ்விய தேசத்தை,— காண - தரிசிக் க,—போதுவார் - போகின்ற தாசர்களது,—தாள் - பாதங் களை,—தலைமேல் - சிரசின்மேல்,—அகங்காரத்தால் - மமதை யினால்,— தாங்கார் - தாங்கமாட்டார்கள் —எ-று. ஆராத னம் உடையேம் எ - கு. திருவாராதனத்தை யுடையேம் எனி னு மமையும்.

(க-து.) ஓராதார் யாம் கல்வியும் உயர்குலமும் செல்வமு முடையோமென்று கர்வத்தினால் திருக்காரகம்போவார் திரு வடிகளைச் சிரசின்மேல் சூடிக்கொள்ளார்—எ-ம். (அங)

திருக்கார்வானம்.

தாலேலோ வென்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுபசியாற்றினண்முன் - மாலேபூங்
கார்வானத் துள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய் நீபண்டு.

(இ-ள்) மாலே - மஹாவிஷ்ணுவே,—பூம் - அழகிய,—கா ர்வானத்து உள்ளாய் - திருக்கார்வானமென்னுந் திவ்வியதேச த்தி லிருக்கின்றவனே,—கடலோடும் - சமுத்திரத்துடன்,—வெற்போடும் - மலைகளோடும்,—பார் - பூமியையும்,—வான ம் - ஆகாயத்தையும,—பண்டு - பூர்வத்தில,—உண்டாய்நீ - புசித்தவனாகியநீ,—ஆய்ச்சி - யசோதையானவள்,—தாலேலோ வென்று - தாலேலோவென்று,—தாலாட்டி - தாலாட்டி,—தன் முலைப்பாலாலே-தனது தனப்பாலினால்,—பசி - பசியை,—முன் - பண்டு,—எவ்வாறு ஆற்றினள் - எவ்விதந்தணித்தாள்—எ-று.

(க-து.) திருக்கார்வானத் துள்ளவனே! கடலோடு மலை யையும் பூமியையும் வானத்தையும் கவளீகரித்த உன் பசியை ய சோதை தன்முலைப்பாலால் எவ்விதந்தணித்தனள்-எ-ம். (அசு)

திருக்கள்வனூர்.

பண்டேயுன் றொண்டாம் பழவுயிரை யென்ன தென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே - மண்டலத்தோர்
புள்வாய்பிளந்த புயலேயுனைக் கச்சிக்
கள்வாவென் றோதுவதென் கண்டு.

(இ-ள்) மண்டலத்தோர் - பூமியிலுள்ளவர்கள்,—பண்டே - பூர்வமே,—உன் - உனது,—தொண்டு ஆம் - அடிமையாகிய,—பழ உயிரை - பழைய ஜீவனை,—என்ன தென்று - என்னுடைய

தென்று, — கொண்டேனை - கருத்தையுடைய என்னை, —கள்வன என்று - திருடனென்று, —கூறுது - சொல்லாமல், —புள் - (பகாசுரன்) நொக்குப்பக்ஷியினது, —வாய் - வாயினை, —பிளந்த - பிளவுசெய்த, —புயலே - மேகவண்ணனே, —உனை - உன்னை, —கச்சி கள்வா என்று (-காஞ்சியில்வசிக்கும் திருடா என்று) காஞ்சியின்கண்ணதாகிய திருக்கள்வனூரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனென்று, —ஓதுவது - சொல்லுவது, —என்கண்டு - எதனைப்பார்த்து—எ-று.

(க-து.) மேகவண்ணா! நான்றுதொட்டுனக் கடிமையான உயிரை எனதென நினைக்குமென்னைக் கள்வனென்னாது உனை க்கள்வனென்ப தென்னகாரணம்—எ-ம். (அரு)

திருப்பவளவண்ணம்.

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலா
லுண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே - பண்டைத்
தவளவண்ணா கார்வண்ணா சாமவண்ணா கச்சிப்
பவளவண்ணா நின்பொற் பதம்.

(இ-ள்) பண்டை - பழமையாகிய, —தவளவண்ணா - சுவேத வண்ணனே, —கார்வண்ணா - மேகவண்ணனே, —சாமவண்ணா - பச்சைவண்ணனே, —கச்சி - காஞ்சியின்கண்ணதாகிய, —பவளவண்ணா - திருப்பவளவண்ண மென்னுந் திவ்வியதேசத்தையுடையவனே, —நின் - உனது.—பொன் - அழகிய, —பதம் - திருவடிகளை, — கண்டு அறிந்தும் - தரிசித்துணர்ந்தும், — கேட்டு அறிந்தும் - கேட்டுணர்ந்தும், —தொட்டு அறிந்தும் - பரிசித்துணர்ந்தும், —காதலால் - ஆசையினால், — உண்டு அறிந்தும் - புசித்துருசித்துணர்ந்தும், —மோந்து அறிந்தும்-வாசனைபார்த்துணர்ந்தும், —உய்யேன் - பிழைக்கமாட்டேன்—எ-று.ஏ-அசை.

(க-ரு.) திருப்பவளவண்ணா ! நின் பொற்பதத்தைக் கண்டு கேட்டு உண்டு மோந்து பரிசித்து அறிந்து நான் பிழையேன்.

திருப்பரமேச்சுரவிண்ணகரம்.

பதத்தமிழாற் றன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தா - னிதத்த
பரமேச் சுரவிண் ணகரான்பலவான்
வரமேச் சுர லணைந்த மால்.

(இ-ள்) இதத்த - நன்மையினையுடைய,— பரமேச்சுரவிண்ணகரான் - திருப்பரமேச்சுரவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை யுடையவனும்,—பல ஆன் - பலபசுக்கள்,—வர - வருப்படியாக,—மேச்சு - மேய்த்து,—உரல் - உரலில்,—அணைந்த - கட்டுண்டவனுமாகிய,—மால் - விஷ்ணுவானவர்,—பதம் தமிழால் - இன்பமாகியதமிழினால்,—தன்னையே பாடுவித்து - தன்னையே பாடச்செய்து,—என்னை - என்னை,—தன் பதத்து - தன் பாதங்களுக்கு,— அடியார்க்கே - தாசராகியவருக்கே,— ஆட்படுத்தான் - தொண்டருக்கினான்—எ-று. பதத் தமிழால் எ-கு. தமிழ்மொழியினால் - .எனினு மமையும்.

(க-து) திருப்பரமேச்சுர விண்ணகரமால் தன்னைத் தமிழால் பாடச்செய்து தன் னடியார்க் கடியனுக்கினன்—எ-ம். (அஎ)

திருப்புட்குழி.

மால்வே ழமுமரவு மாயையும்வெற் புங்கடலு
மேல்வீழ் படையும் விடமும்போய்ப் - பால
னெருப்புட் குழிகுளிர நின்றதுங் கேட்டோதார்
திருப்புட் குழியமலன் சீர்.

(இ-ள்) மால் - பெரிய,—வேழமும் - யானையும்,—அரவும் - பாம்பும்,—மாயையும் - மாயமும்,—வெற்பும்-மலையும்,—கடலு

ம்-சமுத்திரமும்,—மேல் - மேலே,—வீழ் - விழுந்த,—படையும்-ஆயுதமும்,—விடமும் - விஷமும்,—போய் - நீங்கி,—பாலன் - பிரகலாதாழ்வான்,—நெருப்புகுழியுள் - அக்கினிக்குண்டத்தில்,—குளிர நின்றதும் - குளிர இருந்ததையும்,—கேட்டு - கேள்வியுற்று,—திருப்புட்குழி - திருப்புட்குழியென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—அமலன் - மல மில்லாதவனுடைய,—சீர் - கீர்த்தியை,—ஓதார் - சொல்லார்கள் (என்னே?)—எ-று. நெருப்புட்குழி என்பதை. நெருப்பு - உள் - குழி எனப் பிரித்து நெருப்புக் குழியுள் என அநுவயப் படுத்துக.

(க-து.) பிரகலாதன் சரித்திரத்தைக் கேட்டிருந்தும் திருப்புட்குழி யமலனது சீரை யோதார்கள் என்னே—எ-ம்.

திருநின்றவூர்.

சீரறிந்து தோழிமீர் சென்றுகொ ணர்ந்தெனக்குப்
போரமுலை முகட்டிற் பூட்டுமினோ - நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னைமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர்.

(இ-ள்.) தோழிமீர் - தோழிமார்களே,—நீர் - நீங்கள்,—நேர் - (யுத்தத்தில்) எதிர்த்த,—அவுணர் - இராக்ஷதர்கள்,—பொன்ற - அழிய,—புள்கழுத்தில் - கருடாழ்வான் கழுத்தில்,—ஊர் - ஆரோகணித் துலாவும்,—பொன்னை - பொன்னையும்,—மாணிக்கத்தை - மாணிக்கத்தையும்,—நின்றவூர் - திருநின்றவூரென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய,—நித்திலத்தை - முத்தையும்,—சீர் - சிறப்பினை,—அறிந்து - தெரிந்து,—சென்று - போய்,—கொணர்ந்து - கொண்டுவந்து,—எனக்கு - எனக்கு,—போர - மிகவும்,—முலை முகட்டில் - தனங்களின் உச்சியில்,—பூட்டுமின் - அணியுங்கள்—எ-று. ஓ - அசை.

(க-து.) தோழிமார்களே! நீங்கள் திருநின்றவூர் முத்தையும் மாணிக்கத்தையும் பொன்னையும் சீர்அறிந்து கொணர்ந்து என் முலைமுகட்டில் பூட்டுமின்—எ-ம். (அ௯)

திருவெவ்வுளூர்.

நீர்மைகெட வைதாரு நின்னோ டெதிர்த்தாருஞ்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையா - னேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் பிழைபொறுத் தருளி
யெவ்வுளத்தனே நீ யிரங்கு.

(இ-ள்) நீர்மை கெட - தன்மையழிய,—வைதாரும் - ஏசினவர்களும்,—நின்னோடு - உன்னுடன்,—எதிர்த்தாரும் - மாறுகொண்டவர்களும்,— சீர்மை பெற - சிறப்பையடைய,—நின் அடிக்கீழ் - உனது சரணங்களின் கீழ்,—சேர்கையால் - சேர்தலினால்,—நேர்மையிலா -ஒழுங்கில்லாத,—வெவ்உளத்தனேன் - கொடிய சிந்தையையுடைய யான்,—செய் - புரிகின்ற,—பிழையை-குற்றத்தை,—பொறுத்து அருளி - க்ஷமித்தருளி,—எவ்வுள் அத்தனே - திருவெவ்வுளூரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனே,—நீ இரங்கு - நீ கிருபைசெய்வாயாக—எ-று.

(க-து.) திருவெவ்வுளூரத்தனே! என் பிழையைப் பொறுத்துக் கிருபை செய்வாயாக—எ-ம். (௯௰)

திருநீர்மலை.

இரங்கு முயிரனைத்து மின்னருளாற் காப்பா
னரங்க னொருவனுமே யாதல் - கரங்களாற்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
னீர்மலைவா ழெந்தையெதிர் நின்று.

(இ-ள்) இரங்கும் - வருந்துகின்ற,—உயிர் அனைத்தும் - எல்லா ஆன்மாக்களையும்,— இன் அருளால் - இனிய கிருபையினா

ல்,—காப்பான் - காக்கின்றவன்,—அரங்கன் ஒருவனுமே - திரு வரங்கநாதன் ஒருவனே,—ஆதல் - ஆகியிருத்தலை,—கரங்களால் - கைகளினால்,— போர்மலை - யுத்தஞ்செய்த,—வான்வந்த - ஆகாயம் வரையினும் பரவிய,—புகழ் - கீர்த்தி வாய்ந்த,—வாணன் - வாணசூரன்,—நீர்மலைவாழ் - திருநீர்மலை யென்னுந் திவ்விய தேசத்தெழுந்தருளிய,—எந்தை -என்தந்தையின்,—எதிர்நின்று - எதிரே நின்று,—காட்டினான் - தெரிவித்தான்—எ-று. போர்மலைவான்வந்த - எ-கு. யுத்தஞ்செய்யும்படி வந்த என்னுரைப்பினுமமையும்.

(க-து.) எல்லா ஆன்மாக்களையுங் காப்பான் அரங்கனொருவனாதலை எதிர்நின்று வாணசூரன் விளக்கினான். எ-ம். (சுக)

திருவிடவெந்தை.

நின்று திரியும் பிறவிபெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையா - ரின்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண் டானேன்
றிருவிடவெந் தைக்கே செறிந்து.

(இ-ள்) திருவிடவெந்தைக்கே - திருவிடவெந்தையென்னுந் திவ்வியதேசத்தே,— செறிந்து - சேர்ந்து,—நின்று திரியும் - அசரமும் சரமுமாகிய,—பிறவி எல்லாம் - ஜனனங்களையெல்லாம்,—நேர்வித்து - சம்பவிப்பித்து,—கொன்றுதிரியும் - சம்மரித்துத்திரிகின்ற,—கொடு வினையார் - கொடிய தொழிலையுடையவராகிய பிரமனும்இயமனும்,—இன்று-இப்போது,—வெருவிட - பயப்படும்படியாக,— எந்தைக்கே - என் தந்தைக்கே,—விழுமிய - சிறந்த,—தொண்டு ஆனேன் - அடிமையாயினேன்—எ-று.

(க-து.) திருவிடவெந்தையைச் சேர்ந்து பிரமனும் இயமனும் அப்பட எந்தைக்கே சிறந்த தொண்டனானேன்—எ-ம். (சுஉ)

திருக்கடன்மல்லை.

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்துவிழப் பாகனையு மோதி - யெறிந்து
தருக்கடன்மல்லைக் குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே
திருக்கடன் மல்லைக்குட் டிரி.

(இ-ள்) செறிந்த - நெருங்கிய,—பணைபறித்து - பணைகைக்கவர்ந்து,—திண் - வலிய,—களிற்றை - குவலயாபீடமென்னும்யானையை,—சாடி மோதி—பாகனையும் - மாவுத்தனையும்,—முறிந்துவிழ - முதுகுமுறிந்துவிழும்படி,—மோதி - அடித்து,—எறிந்து - தூக்கிவீசி,—தருக்கு - இறுமாப்பையும், —அடல் - பலத்தையுமுடைய,—மல்லை - மல்லர்களை,—குமைத்தான் - அழித்தவனாகிய விஷ்ணுவே,—தஞ்சம் என்று - சரணாகதி யென்று,—நெஞ்சே - மனமே,—திருக்கடன்மல்லைக்குள் - திருக்கடன்மல்லை யென்னுந் திவ்யதேசத்தில்,—திரி - சஞ்சரிப்பாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! வலிய மல்லர்களைக்கொன்ற விஷ்ணுவே தஞ்சமென்று திருக்கடன் மல்லையில் சஞ்சரிப்பாயாக—எ-ம்.

திருவல்லிக்கேணி.

திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்முன் - மருந்தாங்
கருவல்லிக் கேணியா மாக்கைக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்.

(இ-ள்) கண்ணன் - கிருஷ்ணனாகிய,— திருவல்லிக்கேணியான் - திருவல்லிக்கேணி யென்னுந்திவ்விய தேசத்தையுடையவனுடைய,—சீர் - கீர்த்தியை,—திரிந்து-சஞ்சரித்து,—உழலும் - சுழலுகின்ற,— சிந்தைதனை - மனதை, — செவ்வே நிறுத்தி - நேராகத் தரிப்பித்து,—புரிந்து - விரும்பி,—புகல்மின் - சொல்

லுங்கள்,—புகன்றால் - (அவ்வாறு) சொல்லினால்,—கருவல்லிக்கு-கருவாகிய கொடிக்கு,—மருந்தாம் -(நசிப்பிக்கும்) ஔடதமாகும்,—மா - மகத்தாகிய,—கதிக்கு - மோக்ஷத்திற்கு,—ஏணியாம்- ஏணியுமாகும்—எ-று. கரு வல்லி எ-கு. ஜனனமாகிய விலங்கு எனினு மமையும்.

(க-து.) மானிடரே! திருவல்லிக்கேணியான் சீரைச்சொல்லின உம்மை ஜனிக்க வொட்டாது மோக்ஷத்தில் சேர்க்கும்—எ-ம்.

திருக்கடிகை.

சீரருளா னம்மைத்திருத்திநா முன்னறியாக்
கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே - நேரே
யொருகடிகையும் மனமே யுள்ளுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான்.

(இ-ள்) மனமே - நெஞ்சமே,—சீர் - சிறந்த,— அருளால் - கிருபையினால்,—நம்மை - நம்மை,—திருத்தி - செவ்வன் செய்து,— நாம் - யாம்,— முன் அறியா - முன்னே தெரியாத,— கூர் அறிவும் - நுண்ணிய விவேகமும்,— தந்து- கொடுத்து,—அடிமை கொண்டதற்கு - தொண்டு கொண்டதற்கு,—நேரே - சரியாக,—ஒரு கடிகையும் - ஒரு நாழிகையும்,—முத்திதரு - மோக்ஷத்தைக்கொடுக்கும்,—கடிகை-திருக்கடிகையென்னுந் திவ்விய தேசத்தெழுந்தருளிய,—மாயவனைத்தான் - மாயவனென்னுந் திருநாமத்தையுடையவனைத்தான்,—உள்ளுகிலாய் - நினைக்கமாட்டாய்—(என்னே?)—எ-று.

(க-து.) மனமே! நம்மைத் திருத்தியாண்டதற்காக ஒரு கடிகையேனும் திருக்கடிகைமாயனைநினைக்காததெற்றுக்கோ—எ-ம்.

தொண்டைநாடு முற்றிற்று.

வடநாட்டுத் திருப்பதிகள்—கஉ.

திருவேங்கடம்.

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானேகுறைமுடிக்குந் தன்மையான் - றேனேய்
திருவேங்கடந் தொழுதேந் தீயவிபூதிக்குண்
மருவேங்கடந்தனமிவ் வாழ்வு.

(இ-ள்) தானே சரணமுமாய் - தானே புகலிடமாகியும்,—தானே பலமுமாய் - தானே ஆதாயமுமாகியும்,—தானேகுறை - தானே மன வேண்டுகோளை,—முடிக்கும் - பூர்த்தியாக்குகின்ற,—தன்மையான் - குணபூதனது,—தேன் ஏய் - தேன் பொருந்திய,—திருவேங்கடம் - திருவேங்கட மென்னுந் திவ்விய தேசத்தை,—தொழுதேம் - வணங்கினோம்,—தீய - கொடிதாகிய,—விபூதிக்குள் - லீலாவிபூதிக்குள்,—மருவேம் - பொருந்தோம்,—இ வாழ்வு - இந்த வாழ்வை,—கடந்தனெம் - கடந்தோம்—எ-று.

(க-து.) தானே சரணமும் பலமுமாய்க் குறைகளை முடிக்குங் குணபூதனானவனது திருவேங்கடம் தொழுததால் இவ்வாழ்வைக் கடந்தோம்—எ-ம். (கக)

திருச்சிங்கவேள் குன்றம்.

வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணையும் முனிவுந் தோன்றியவால் - கேழ்கிளரு
மங்கவேள் குன்ற வழல்சரபத்தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு.

(இ-ள்) கேழ் - நிறம்,—கிளரும் - விளங்குகின்ற,—அங்கம் - தேகத்தையுடைய,—வேள் - மன்மதனானவன்,—குன்ற - நசிக்க,—அழல் - கோபித்த,—சரபத்தை - சரபப்பட்சியை,—பிளந்த - போழ்ந்த,—சிங்கவேள் குன்றத்தினார்க்கு - திருச்சிங்கவேள் குன்ற மென்னுந் திவ்விய தேசத்தை யுடையவருக்கு,—வா

ழ் - உச்சீவித் திராநின்ற,—குமரன்மேல் - பிரகலாதன்மீது,—கருணையும் - சிறுடையும்,—கனக வஞ்சகன் மேல் - கபடனாகிய இரணியன் மீது,—முனிவும் - கோபம்,—ஓர் முகத்தே - ஒரு முகத்திலிடத்திலே,—தோன்றிய-உதித்தன—எ-று-ஆல்-அசை

(க-து.) திருச்சிங்கவேள்குன்றத்திலார்க்கு ஓர் முகத்திலேதானே கருணையுங் கோபமும் முறையே பிரகலாதன் மீதும் இரணியன் மீதுந் தோன்றின—எ-ம். (கஎ)

திருவயோத்தி.

ஆர்க்குமிது நன்றுதீ தானாலு நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே - சீர்க்குந்
திருவையோத்திப் புயலைச் சீரிய மெய்ஞ்ஞானத்
துருவையோதத்திற் பொருளை யோர்.

(இ-ள்.) ஆர்க்கும் - எவருக்கும்,—இது - யான் சொல்லுவது,—நன்று தீது ஆனாலும் - நன்றேயாயினுந் தீதேயாயினும்,—நெஞ்சே - மனமே,—நீ - நீ,— பார்க்கும் - பார்க்கின்ற,—பலகலையும் - பல சாஸ்திரங்களையும்,— பன்னாதே -தேராமல்,—சீர்க்கும் - சிறப்பினையுடைய,—திருஅயோத்தி - திருவயோத்தியென்னுந் திவ்வியதேசத் தெழுந்தருளிய,— புயலை - மேகவண்ணனை,—சீரிய - சிறந்த,—மெய் ஞானத்து உருவை - சத்திய ஞானசொரூபியை,— ஓத்தின் - வேதத்தின்,—பொருளை - அருத்தமானவனை,—ஓர் - அறிவாயாக—எ-று.

(க-து.) நெஞ்சே! நீ பல கலையும் பன்னாமல் திருவயோத்தியி லெழுந்தருளிய ஞான சொரூபனை அறிவாயாக—எ-ம்.

திருநைமிசாரணியம்.

ஓரறிவு மில்லாத வென்போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண் டேனும் பிறர்க்கரிது - பாரறிய

நைம்மிசாரண்ணியத்து நாதரடி யாரோடு
இம்மிசார் வுண்டாயி னால்.

(இ-ள்.) பார் அறிய - உலகத்தாரறியும்படி,—நைமிசாரண்ணியத்து-திருநைமிசாரண்ணிய மென்னுந் திவ்விய தேசத்தெழுந்தருளிய,—நாதர் - சுவாமியின்,—அடியாரோடும் - பாகவதர்களோடும்,— இம்மிசார்வு - ஓர் இம்மியளவுச்சார்தல்,—உண்டாயினால் - உள்ளதாயினால்.—ஓர் அறிவும் இல்லாத - ஓர் அறிவுமில்லாத,— என்போல்வார்க்கு - என்னை ஒத்தவர்க்கும்,—உய்யல் ஆம் - பிழைக்கலாகும்,—பிறர்க்கு - (அச்சார்பில்லாத) பிறருக்கு,—பேர் அறிவு - மிக்க அறிவு,—உண்டேனும் - உள்ளதேயாயினும்,—அரிது - (உச்சீவித்தல்) அருமையாகும்.

(க-து.) திருநைமிசாரண்ணியத்தெழுந்தருளிய சுவாமியின் அடியாரோடிரவாகுமவரோ யுச்சீவிப்பர்—எ-ம். (கக)

திருச்சாளக்கிராமம்.

உண்டா முறைமை யுணர்ந்தடிமைப் பேர்பூண்டேன்
பண்டாங் குடிகுலத்தாற் பன்மதத்தாற் - கொண்டாட்டா
லாளக் கிராமத்தா லல்லற்பேர் பூணமற்
சாளக் கிராமத்தார் தாட்கு.

(இ-ள்) பண்டுஆம் - பூர்வீகமாகிய,—குடி - கோத்திரத்தினாலும்,—குலத்தால் - குலத்தினாலும்,—பல் - பலவாகிய,—மதத்தால் - மதக்கோட்பாடுகளாலும்,—கொண்டாட்டால் - சந்தோஷத்தினாலும்.—ஆள் - ஆளாநின்ற,—அ கிராமத்தால் - அந்தக் கிராமத்திலுள்ளவர்களால்,—அல்லல் - துன்பத்தைக் கொடுக்கும்,—பேர் - பெயரை,—பூணமல் -சரியாமல்,—சா

ளக்கிராமத்தார் - திருச்சாளக்கிராமமென்னுந் திவ்யதேசத்தெழுந்தருளியவருடைய,— தாட்கு—திருவடிகளுக்கு,—உண்டாம் - உள்ளதாகிய,—முறைமை - நாம் அடிமை யென்னுங் கிரமத்தை,—உணர்ந்து - தெரிந்து,— அடிமைப்பேர் - தாசியனென்னும் பெயரை,—பூண்டேன் - வகித்துக்கொண்டேன்—எ-று.

(க-து.) திருச்சாளக்கிராமத்தார் தாட்கு நான் தாசியனென்னு முறைமையை யறிந்து அடிமைப்பேரைப் பூண்டேன்-எ-ம்.

திருவதரியாச்சிரமம்.

தாட்கடிமையென்று தமையுணரார்க் கெட்டெழுத்துங்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை - வேட்கையொடு
போவதரி தாகிலும் போய்த்தொழுவோ நெஞ்சமே
மாவதரி யாச்சிர மத்து.

(இ-ள்) நெஞ்சே - மனமே,—தாட்கு - திருவடிகளுக்கு,—தமை - தம்மை,—அடிமை யென்று - தொழும்பென்று,—உணரார்க்கு - அறியாதவர்களுக்கு,—எட்டு எழுத்தும் - அஷ்டாட்சரமும்,—கேட்க - செவிப்புலனும்படி,—வெளியிட்டருளும் - வெளியிட்டருளிய,—கேசவனை - கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனை,— வேட்கையொடு - ஆசையுடன்,—போவது - செல்லுவது,—அரிது ஆகிலும் - அருமையா யிருக்கபோதிலும்,—மாவதரியாச்சிரமத்து - பெருமைபொருந்திய திருவதரியாச்சிரமமென்னுந் திவ்விய தேசத்தில்,— போய் - சென்று,—தொழுவோம் - வணங்குவோம்—எ-று.

(க-து.) நெஞ்சே! தம்மைத் திருவடிகட்குத் தொழும்பென் றுணராத பாமரருங் கேட்டுச்சீவிக்கும்படி அஷ்டாட்ச

ரத்தையும் வெளியிட்ட கேசவனைத் திருவதரியாச்சிரமத்துச் சென்று வணங்குவோம்—எ-ம். (௧0௧)

திருக்கங்கைக்கரைக்கண்டம்.

மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
வத்தா வெனக்குன் னடிப்போதிற் - புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய் புண்டரிக
மங்கைக் கரைசே வழங்கு.

(இ-ள்) கங்கைக்கரைசேரும் கண்டத்தாய் - திருக்கங்கைக் கரைக்கண்டமென்னுந் திவ்வியக்ஷேத்திரத்தையுடையவனே,—புண்டரிகம் - தாமரையில் வசிக்கும்,—மங்கைக்கு - இலக்ஷுமிக்கு,—அரசே—நாயகனே,— மத்தால் - மந்தரமென்னு மத்தினால்,—கடல்கடைந்து - திருப்பாற்கடலை மதித்து,—வானோர்க்கு - தேவர்களுக்கு,— அமுது அளித்த - அமுதைக் கொடுத்த,—அத்தா - இறைவனே,—எனக்கு - அடியேனுக்கு,—உன் - உன்னுடைய,—அடிப்போதின் - பாத மலரிலிருக்கும்,—புத்து அமுதை - புதிய அமுதத்தை,—வழங்கு - கொடுப்பாயாக.

(க-து.) திருக்கங்கைக்கரைக்கண்டத்தாய்! உன் அடிப்போதிலுள்ள புத்தமுதை எனக்கு வழங்குவாயாக—எ-ம். (௧0௨)

திருப்பிருதி.

வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப் பெய்து
விழுங்குங் கவந்தன் விறற்றோட் - கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போர்துணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே செல்.

(இ-ள்) வழங்கும் - இயங்குகின்ற,—உயிர் அனைத்தும் - எல்லாவுயிரையும்,—வாரி - கவர்ந்து,—வாய் பெய்து - வாய்க்

குள் இட்டு,—விழுங்கும் - விழுங்கிய,—கவந்தன் - கவந்தனை து,—விறல் - வெற்றிபொருந்திய,— தோள் கிழங்கை - தோ ளாகிய கிழங்கை,—பொருப்பு - பர்வதமானது,— இருதிக்கும் - இரண்டு திக்கிலும்,—கிடந்தாற்போல் - கிடந்ததுபோலும்,— துணித்து - துண்டமாக்கி,—வீழ்த்தான் - விழச்செய்தவனை து,—திருப்பிருதிக்கு - திருப்பிருதி யென்னுந் திவ்வியதேசத் துக்கு,—என் நெஞ்சே - என் மனமே,—செல் - போவாயாக.

(க-து.) என் நெஞ்சே! கவந்தனது தோளைப்பிளந்தவனை து திருப்பிருதிக்குச் செல்லுவாயாக—எ-ம். (௬) ௧

திருவடமதுரை.

செல்வ முயிருடம்பு சேர வுரித்தாக்கி
வல்வினையி னீங்கினோ மாந்தர்கா - டொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்தசரஞ் சென்று
திடமதுரை செய்தான் றிறத்து.

(இ-ள்) மாந்தர்காள் - மானிடர்களே,— தொல்லை - பழமை யாகிய,—வடமதுரையான் - திருவடமதுரை யென்னுந் திவ்வி ய தேசத்தையுடையவனது,— கழலே - திருவடிகளே,—வாய் த்த - பொருந்திய,—சரணம் என்று - சரணமென்று,—திடமு து - உறுதியை,—உரை செய்தான் - சொல்லினவனது,—திற த்து - வசத்து,—செல்வம் - பொருளும்,—உயிர் - ஆவியும்,— உடம்பு - உடலும்,—சேர - ஒருமிக்க,—உரித்து ஆக்கி - உரிமை யாக்கி,—வல்வினையின்-கொடியவினையினின்றும்,—நீங்கினோம்- நிவர்த்தியாயினோம்—எ-று.

(க-து.) மாந்தர்காள்! யாம் திருவடமதுரையான் கழலே சரணமென் றுரைசெய்தவன்வசத்தில் உடல் பொருளாவி மூ ன்றையும் தத்தஞ்செய்து வல்வினையினின்று நீங்கினோம்—எ-ம்

திருத்துவாரகை.

திறந்திறமாத் தாந்துய்க்குந் தீஞ்சுவையை நாடி
யறந்திறம்பிப் பாதகரோ ரைவர் - நறுந்துளவ
மாதுவரை யோனே மனந்துணையாக் கொண்டென்னைக்
காதுவரையோ மெய் கலந்து.

(இ-ள்) நறுந்துளவம் - வாசனையுள்ள துளசிமாலையை யணிந்த,—மா - பெருமை பொருந்திய,—துவரை யோனே - துவாரகாபுரியென்னுந் திவ்வியதேசத்தையுடையவனே,—திறம் திறம் ஆ - விதம் விதமாக,—தாம் துய்க்கும் - தாம் அனுபவிக்கும்,—தீம் - மதுரமான,—சுவையை - உருசியை,—நாடி - தேடி,—அறம் - தருமத்தினின்றும்,—திறம்பி - தப்பி,—பாதகர் - தீவினையையுடையவராகிய, —ஓர் ஐவர் - பஞ்சேந்திரியாதிகள்,—மனம் - எனது நெஞ்சத்தை,—துணையாக்கொண்டு - சகாயமாகக்கொண்டு,—என்னை - என்னை,—மெய் கலந்து - சரீரத்துட்சேர்ந்து,—ஐயோ - ஐயோ,— காதுவர் - வருத்துவார்கள்—எ-று.

(க-து.) மாதுவரையோனே! பஞ்சேந்திரியாதியர் என் சரீரத்துட் கலந்து என்னை வருத்துவதற்கு ஐயோ யான் என் செய்வேன்—எ-ம். (௧௦௫)

திருவாய்ப்பாடி.

கலந் தமரரோடுங் கலைகண்டா ரோடும்
பொலிந்து திருநாட்டிருக்கப் போவீர் - மலிந்தபுக
ழண்டராய்ப்பாடி யமல ரடியாரடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும்.

(இ-ள்) மலிந்த புகழ் - புகழ் மிக்க,— அண்டர் - இடையர்களது,—ஆய்ப்பாடி - திருஆய்ப்பாடி யென்னுந் திவ்வியதேசத்தெழுந்தருளியிருக்கும்,—அமலர் - மலமில்லாதவருடைய,—

அடியார் அடியார் - தாசர்களுக்குத் தாசராது,—தொண்டராய் - தாசராய்,—பாடி - பாடி,—தொழும் - வணங்குங்கள்;—(அங்ஙனம் வணங்கினால்) அமரரோடும் - தேவர்களோடும்,—கலை கண்டாரோடும் - சாஸ்திரங்களைக் கண்டறிந்தவர்களோடும்,—கலந்து - சேர்ந்து,—பொலிந்து - சிறந்து,—திருநாட்டு - திருவைகுந்தத்து,—இருக்கப்போவீர் - தங்கியிருக்க ஏகுவீர்கள்—எ-று.

(க-து.) திருவாய்ப்பாடி யமலரது தாசர்களுக்குத் தாசரது தாசராய்ப் பாடித் தொழுதால் திருவைகுந்தத்துத் தெள்ளியோரோடுந் தேவரோடும் கலந்திருக்கலாகும்—எ-ம். (கூசு)

திருப்பாற்கடல்.

தொழும்பாய நானல்ல சூதறிந்து கொண்டேன்
செழும்பா யலைமுத்தஞ் சிந்தி - முழங்குந்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தா ரடிசேர்ந்
திருப்பாற் கடலா மிடர்.

(இ-ள்) செழு-செழுமையாகிய,—பாய்அலை - பரம்புகின்ற அலையானது,—முத்தம் - முத்துகளை,—சிந்தி - சிதறி,—முழங்கும் - சத்திக்கும்,—திருப்பாற் கடலான் - திருப்பாற் கடலென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தெழுந்தருளியிருப்பவனது,—தாள் - திருவடிகளை,—சேர்ந்தார் - அடைந்தவரது,—அடிசேர்ந்து - திருப்பாதங்களைப் பொருந்தி,—இருப்பார்கு - இருப்பவனுக்கு,—இடர் - துன்பங்களை,—அடல் ஆம் - நசிப்பித்தல் முடியும் (என்கின்ற),—நல்லசூது - நல்லஉளவை,—தொழும் பாய நான் - அடிமையாகிய யான்,—அறிந்து கொண்டேன் - தெளிந்து கொண்டேன்—எ-று.

(க-து.) திருப்பாற் கடலான் றாள்சேர்ந்தா ரடிசேர்ந்திருப்பார்க்கு இடரடலாமென்னு நல்ல கருத்தினை யானறிந்து கொண்டேன்—எ-ம். (௧0௭)

வடநாடு முற்றிற்று.

திருநாட்டுத் திருப்பதி—௧.

பரமபதம்.

இடருடையேன் சொல்ல வெளிதோ பிரம
னடரும்விடை யோர்க்கு மரிதே - தொடருங்
கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம் பெறுவார் சீர்.

(இ-ள்) தொடரும் - தொடர்ந்து வருகின்ற,—கருவைகும் - கருவினிடத்துப் பொருந்தும்,—தம் பிறவி - தமது ஜனனத்தினது,—கட்டு அறுத்து - தளையைச் சேதித்து,—மீளா - திரும்பாத,—திருவைகுந்தம் - திருவைகுந்தமென்னுந் திவ்வியதேசத்தை,—பெறுவார்-அடையப்பெறுவாரது,—சீர் - சிறப்பை,—பிரமன் - பிரமனுக்கும்,—அடரும் விடையோர்க்கும்,—பொருதும் ரிடபத்தையுடைய வுருத்திரனுக்கும்,—அரிது - சொல்லமுடியாதாயின்,—இடருடையேன் - துன்பத்தையுடையவனாகிய யான்,—சொல்ல - புகல,—எளிதோ - இலேசோ—எ-று.

(க-து.) திருவைகுந்தம் பெறுவார்சீர் இடருடையேனாற் சொல்ல வெளிதோ—எ-ம். (௧0௮)

திருநாடு முற்றிற்று.

மன்னி லரங்கமுதல் வைகுந்த நாடளவு
மென்னுந் திருப்பதிநூற் றெட்டினையு - நன்னுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ.

பதின்ம ருரைத்த பதியொருநூற் றெட்டுந்
துதிசெய்ய வந்தாதி சொன்னா - னதிக
குணவாள பட்டர்திரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து.

அழகிய மணவாளதாசர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

சோதனைபத்திரம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௫௫	௧௫	தஞ்சம் என	தஞ்சமாக.
,,	௨௧	,,	ஆல் - அசை.
௫௮	௮	ஊனார்	ஊனர்.
௬௪	௪	,,	நாவில் - நாவினிடத்து.
௬௫	௨௪	பகர்வகிதைய	பகவர்கீதையை.
௬௯	௧௧	முடிகின்றான்	முடிகின்றான்.
௬௭	௧௨		காண் - அசை.

T.6598